ஸ்ரீமதேராமாநுஜாயநம:

# கோலாட்டப்பாடல்.

திருமந்த்ரபுரம்,
பாடிவப்சோத்தாரகனுகிய
ம-ா-ா-ஸ்ரீ-தெலுங்குவித்வாம்சர்
பார்த்தசாரதிநாயகரவர்கள்
அநுமதியின்படி
ஷை-திருமந்த்ரபுரத்தில்-ஷை-நாயகரவர்களால்
ஏற்படுத்திய
தமிழ்பாடகசாலையின் - உபாத்தியாயராகிய
தொட்டிக்கலை
தெய்வசிகாமணிமுதலியாரால்
இயற்றப்பட்டது.

இஃது,
சென்னை-எ-வ து-டிவிஜன்-இனிஸ்பெக்டரவர்களுடைய
இங்கிலீஷ் - ரைட்டராகிய
ஸ்ரீமான் - சடகோப சூரியவர்கள்
குமாரராகிய -
பு - வரதராஜசூரியவர்களால்
தஞ்சாவூர்,
கன்வினயசெட்டியாரவர்களது
இந்துவித்தியாநிலய அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

௲அ௱௯-(ஹ)-செப்டம்பர்மீ.

ஸ்ரீராமஜெயம்.



# கோலாட்டப்பாடல்.

காப்பு.

வெண்பா.

மாலாட்டராஜ வனிதையர்களிற் சிலர்கள் ... ... ... *
கோலாட்டம்பாடிமிகக் கொண்டாடி - மேலான ... *
பாலகிருஷ்ணனைச்சேர்ந்த பண்பினையான்பாடவொரு *
பாலசந்த்ராதநநதன்காப்பாம்... ... ... ... ... *

## சிறப்புப்பாயிரம்.

நிலமண்டில ஆசிரியப்பா.

சராசரமுழுதந் தானாககாட்டும்... ... ... ... ... *
நிராமயசுகுண நித்யாநந்த... ... ... ... ... *
மாலெனப்பெயர்கொள்-வண்ணமையாலவன்மேல்... ... *
மாலெண்ணுமவர்-வையகத்துண்டோ... ... ... *
ஆதலால்க்ஷத்ரிய-அரிவையர்தங்கள்... ... ... ... *
காதலின்கண்ணனைக்-காணுதேங்கி ... ... ... ... *

ஒருவர்க்கொருவர்-ஒருவர்பால்ஸம்சயம் ... ... ... *
பெருகதினைத்தப்-பேதமைநீங்கித்... ... ... ... *
தெளிந்தோரிடத்தில்-சேர்ந்துக்ஷேமங்கள்... ... ...*
களிப்புடனறிந்து-கண்ணனைக்காணத் ... ... ... *
திருச்செந்தூர்வளர்-சேவகனைக்கண்... ... ... ...*
டருத்தியோடேத்தி-பவரால்பஜனை... ... ... ... *
நடத்தும்பக்தர்-நன்மனையினிலே ... ... ... ...*
திடத்துடன்வருவா-ரென்றேதெளிந்து... ... ... *
வந்துகோலாட்டம்-மருவுதேசிகத்தில்... ... ... ..*
உந்துகாநம்-சந்தமாய்ப்பாடி...... ... ... ... *
அவரவரிஷ்டகாம்-யத்தினையடைய ... ... ... ...*
நவையறுமந்த்ர-நகர்வாழ்ப்ரபுவாம்...... ... ... *
பாடிபார்த்த-சாரதிமனையில் ... ... ... ... ...*
தேடிவந்து-ஸ்ரீதரனைக்கண்... ... ... ... ... *
டுவப்புடன்சேர்ந்துவாழ்-உந்நதமகிமையைச்... ...*
சுவைத்தமிழ்ப்பாவாத்-தொடுத்தனளிசையுடன்...... *
திருத்தொட்டிக்கலை-தெய்வசிகாமணி... ... ... ...*
திருத்...ாவலர்தாட்-சென்னிமேற்கொண்டே... ... *

பாயிரமுற்றிற்று.

---

## நூல்.

சுகந்தநிலகம்-நெஞ்சொடுவெறுத்துச்

சுவாமியைத் தேடிக்கொண்டுவருகிற – சிசபத்தியம்.

ஓகோவென்னெஞ்சமே-உள்ளபோதனையவும் ... ...*
ஒருவிதலச்சையால்-உலவுகின்றாய்... ... ... ... *
ஓகோமனையதில்-விருதாவிலூடியே... ... ... ...*
காலங்கழித்துமின்-கருதுகின்றாய்... ... ... ... *
காற்றுள்ளநேரமே-தூற்றிக்கொள்ளாமல்நீ... ... ...*
கண்ணனைகன்றுமின்-எண்ணுகின்றாய்...... ... ... *

உன்மனப்பிரியமவர்-தன்மனமுமறியுமே... ... ... *
ஊருக்குளொருதாசி-யாருக்காவாள்...... ... ... *
என்றவுவமானதுபோல-வெந்தனுதர்... ... ... ...*
பக்ஷமதுவேண்டு-பவர்கோடி-பாரினுண்டு ... ... *
ஆகிலுந்தேடுவோமென்று-அதிகப்ரியமாய்... ... ...*
சந்த்ரிகையில்தேடி-வந்தாள்-ஸுகந்ததிலகம் ... ... (ச)

வசனம்.

இப்படி சுகந்ததிலகம்- சுவாமியைத்தேடிவருகிறபோது சுகுண பூஷணியென்கிற மற்றொரு மோகநாயகி கனவில்மகிழ்ந்து- நினைவில்தளர்ந்து சுவாமியைத்தேடிக்கொண்டு வருகிறவிதங்காண்க.

சீசபத்தியம்.

சரதகேளிவிலாச-சுந்தராநந்தரோன் ... ... ... .. *
பஞ்சணையில்மீதிலே-பரிவுகொண்டு...... ... ... *
வந்தெனதுநித்திரையி-லுவந்துபரிசோதனை... ... ...*
செய்துதன்கையினால்-பையவெனது...... ... ... *
ஸ்தநகநககலசகவசத்தினை-நெகிழ்த்தவே... ... ...*
ஆனந்தபுளகமாய்-ஆவல்கொண்டு... ... ... ... *
நானுமென்கைபிணையில்-நாதனைத்தழுவிவெகு ... ...*
காமக்ரீடைகள்செயும்-காலமதிலே... ... ... ... *
வேறேயொருஸ்திரீவரக்கண்டு-வெட்கமீறி... ... ...*
விலகசொற்பனமதாகண்டு-விசநமுற்றேன்... ... ...*
என்றுநாற்சந்திவீதியில்-நின்றுதேடி...... ... ... *
வந்தனள்சுகுணபூஷணி-சந்திரிகையிலே ... ... (உ)

வசனம்.

இவ்விதமாக சுகுணபூஷணி சுவாமியைத்தேடிக்கொண்டு வருங்காலத்தில் மதுரபாஷிணியென்கிற - மற்றொருமாது - ப்ரவுடைநாயகியும் - சுவாமியின் அருமைபெருமைகளை வியந்துதேடிக்கொண்டு வருகிறவிதங்காண்க.

## சண்பகமாலை விருத்தம்.

பிரியமிருந்தவெந்தனது பேதமையறந்த மகானுபாவராம்... ...*
அருமையறிந்தவெங்கள்துரை அல்போடறிந்து மகிழ்ந்தணைந்தவர்*
மருவுவசந்தகாலமதில் வந்தணையாதது ஞாயமோவெனப்... ...*
பருவரதிக்குநேர்மதுர பாஷிணி சுவாமியைதேடிவந்தனள் ... (ரு)

## வசனம்.

இவ்விதமாக மதுரபாஷிணி ஸ்ரீகிருஷ்ணனைத் தேடிக்கொண்டு வருகிற சந்தர்ப்பத்தில் - நித்யகல்யாணியென்கிற யௌவநமாதும் மன்மததூஷணஞ் செய்துகொண்டு சுவாமியைத்தேடி வருகிறவிதங்காண்க.

## கந்தார்த்தம்.

மனுவுவனதிவேதனை-யதனுலெல்மதிமயங்க வைத்தாயென்னுள்ச்*
சதனுமணிவரிவினியுன - ததிகாரங்குலைந்து நீ... ... ... ... *
யலைந்துபோகாயோ - அன்றிமேலும்... ... ... ...*
அகடுசெய்வாயோ...... ... ... ... ... ... *
பதிதபாவநரொந்தன் - பாக்யவசத்திலேலே... ... ... ... ...*
அதிதுஷ்டப்பெண்ணவர் - தனைந்திடிலொருக்காலே... ... ... *
அலைந்துபோகாயோ - அன்றிமேலும்...... ... .. *
அகடுசெய்வாயோ... ... ... ... ... ... (சு)

## இருவுமது - கீதம்.

என்றுசதிநித்யகல்யாணி யெழில்மிருந்த ... ... ...*
சந்திரிகையினிலிராத்திரிச் சமயமதிலே... ... ... *
சுந்தராகாரமன்மதன் தந்தையான ... ... ... ...*
வாசுதேவனைத்தேடினுள் வசுமதியிலே ... ... ... *

## வசனம்.

இவ்விதமாக நித்யகல்யாணி - விரகவேதனையால் மதனனைத் தூஷித்துக்கொண்டுசுவாமியைப்பூரணசந்த்ரிகையிலேதேடிக்கொண்டு வருகிறபோது நடனசுந்தரியென்னும் - மற்றொருநாயகியும் விர

கவேதனை பொறுக்கமாட்டாமல் சந்திரனைத் தூஷித்துக்கொண்டு சுவாமியைத் தேடி வருகிறவிதங்காண்க.

சீசபத்தியம்.

உன்னைதல் கவிகையாய்-நன்னியத்தொடுகொண்ட... ...*
மன்மதன் தீப்பட்ட-தென்ன கேலி... ... ... ... *
நிலவேயுனைப்போல-நிர்மூட சிருஷ்டியோர் ... ...*
காசினியதனிலுங்-கண்டதில்லை... ... ... ... ...*
நீபுனதுபாரிகள் - நினைவறித்தாயாகில் ... ... ...*
தேய்வுரோகமதனைத்-தீண்டவசமோ... ... ... *
குருவினதுபத்தினியைக் - கூடியணைந்தவன் .. ... ...*
பெருமையென் - மற்றுள - ப்ரதாபமென்ன... ... *
உத்தமனைக்குறும்புகள் - எந்தன்நாதர்,.. ... ...*
வத்தயில்செய்வையோ - வென்று வைதுவெளியில்... *
நடனசுந்தரி - மந்த்ரமா-நகரில்பால... ... ... ...*
கிருஷ்ணனைத்தேடி - வந்தா-ளபிஷிடமுடனே... ...(௫)

வசனம்.

நடனசுந்தரிசுவாமியைத் தேடிவருகிறபோது சந்த்ரபிம்பாநதியென்னும்வேறொருவிரகநாயகி யொழுங்கதூஷணைசெய்துசுவாமியைத் தேடிக்கொண்டுவருகிற விதங்காண்க.

சீசபத்தியம்.

பொழுதேயுனக்கொரு போக்குநீக்கில்லையோ ... ...*
என்னுடனொல்பாலி - லாதவேளை... ... ... ... *
நிமிஷமொருயுகமாக-நீடித்துநிற்கிறாய் ..... ... ...*
அவரிருந்தாலாண்டு-அரைநொடிக்கு...... ... ... *
சமமதாக்காணுமுன்-தன்மையாலல்லவோ... ... .. *
ஆண்டிவில்முன்னூற்றி-னறுபதாகும்... ... ... *
ஜநநமரணமுனக்கு-சம்பவிக்கின்றது... ... ... ...*
சாபாசுஇதுவெகு-சம்ப்ரதாயம்...... ... ... ... *

ஆகிலும்ப்ராணநாத-ரென்னருகிருக்கும் ... ... ...*
வேளைநீடித்திருந்திட-வேண்டுமென்று... ... ... *
சந்த்ரபிம்பாநநிநல்ல-சந்த்ரிகையிலே... ... ... *
சாமியைத்தேடி-வந்தனள்காமமுறவே... ... ...(சு)

வசனம்.

இவ்விதமாகசந்த்ரபிம்பாநநிசுவாமியைத்தேடிவருகிறபோது பூலோகரதியென்னும் மற்றொரு சிங்காரநாயகி விரகவேதனையெழுப்பிவருகிற தன்கிளியின்வார்த்தையை நிந்தித்துக்கொண்டு சுவாமியைத்தேடிவருகிறவிதங்காண்க.

திபதை.

பஞ்சரந்தனிலவாழ் - பைங்கிளியெனது ... *
பஞ்சணைமீதிலே - பாலகிருஷ்ணரிருந் ... ... ...*
தென்னுடன்ரதிகேளியினில் - ரஹஸ்யமாய்ச்... ... *
சொன்னதும்அதற்குநான் - பின்னிடையாமல் ... ...*
ஸ்மரதியுபாதி - ஸாஹஸம்செய்யக் ... ... ... *
கமலாக்ஷிநீயே - காமமஞ்சரியெனத் ... ... ...*
தனதுத்ருப்தியையென்-தன்னுடன்சொன்னதைக்... *
கனிவுடன்கேட்ட - தெக்காலமுஞ்சொல்லி... ... ...*
விரகாக்கினியைநெய் - விட்டெழுப்புதலை ... ... *
விரகுடன்கேட்டு - வெப்பமுற்றதனை... ... ... ...*
உளமைகண்டுகேளு - வுள்ளடக்குதல்போல் ... ... *
சாமியென்பாலிலாச் - சமயங்கள்தோறும் ... ...*
மனதிலேயடக்கி - மறுகிடச்செய்யுதே... ... ... *
இனியென்னசெய்குவேன் - இறைவனைத்தேடிக்... ...*
கண்டுபிடிப்பதே - காரியமென்றெண்ணி ... ... *
பொன்திகழுமேனியாள் - பூலோகரதி ... ... ...*
வந்தனள்மந்திர - மாநகரில்நாத்... ... ... ... *
சந்திவீதியில் - சந்திரிகையினிலே ... ... ... (எ)

## வசனம்.

இவ்விதமாகப் பூலோகாதிசுவாமியைத் தேடிக்கொண்டு வருகிறபோது ரசிகசிகாமணி யென்னும் ஒரு ரஞ்சிதநாயகி ஞாயமானஜூடலைசுவாமி அநியாய மானதென்று நிஷ்டூரமாய்ப்போயிருக்கிறுனென்றுவிசனப்பட்டுத் தேடிக்கொண்டு வருகிறவிதங்காண்க.

## மத்தகோகில.

என்னுடன் புணர்கின்ற வேளையில் ... ... ... *
யாதவர்க்கொரு மாதுமேல்... ... ... ... ...*
உன்னுகின்ற ததிந்துநானவ... ... ... ... ... *
ரோடுசெத்தில ஆடலைப்... ... ... ... ...*
பண்ணினேனது குற்றமாயவர் ... ... ... ... *
பாவனைக்கிடமாவதால்... ... ... ... ... ...*
கண்ணன்வந்தில சொல்றுவந்தனள்... ... ... ... *
காணரசிக சிகாமணி ... ... ... ... ... (அ)

## பொதுவசனம்.

இவ்விதமாக மோகப்பிரவுடைகள் எட்டுப்பேரும் அவரவர் மனோபாலங்களைத் தங்களுக்குள் சொல்லிக்கொண்டு யாவரும் ஓரிடத்தில் வந்து சேர்ந்தபின் ஒவ்வொருவரும் சுவாமியைத்தேடி வந்திருக்கிருர்கள் என்று சந்தேகந்தீர்ந்து ஒருவர்க்கொருவர் க்ஷேமலாபங்களைவிசாரிக்கிற விதங்காண்க.

## பொதுசாருவிருத்தம்.

அஷ்டராஜவநிதையர்கள் - ஆகமீறமோகமாய்... ... ...*
இஷ்டகாமியார்த்தசித்தி - யெய்திவாழுமைதிகழ் ... ... *
கிருஷ்ணமூர்த்திசித்விலாஸ - கேளியார்விநோதஅ... ... ...*
ஸ்ரேஷ்டமாகவோரிடத்தில் - பேணிசேர்ந்திருந்தனர் ... ...(கூ)

## பொதுவசனம்.

ஸ்ரீபாலகிருஷ்ணனைத்தேடி ராஜஸ்திரீகள் எட்டுப்பேரும்ஓரிடத்தில் சேர்ந்தார்கள் மேல் நடந்தது காண்க.

### ரசிகசிகாமணி மற்ற ராஜஸ்த்ரீகளைப் பார்த்து யோகக்ஷேமங்கள் விசாரித்து சுவாமியைக் கண்டுபிடிக்கப் புலன் சொல்லுகிற

### திபதை - அல்லது - அகவல் - கல்யாணி.

சுகந்ததிலகமே - சுகுணபூஷிணியே... ... ... ... *
தருமதுரபாஷிணி - சந்த்ரபிம்பாநநி ... ... ...*
நித்யகல்யாணி - நிறைநடநசுந்தரி ... ... ... *
இத்தரணியில்ரதி - யாவருங்க்ஷேமமோ ... ... ...*
நமதுப்ராணேசரும் - நன்மனையினிலே ... ... *
மமதையாய்நித்தியம் - வருகின்றனரோ ... ... ...*
வந்திடில்நீரொன் - வசந்தகாலமதில் ... ... ... *
சந்த்ரிகையினிலே - தனித்தனிவந்தீர்... ... ... ...*
அதனுலில்லையென் - றறிந்தேனிப்போ... ... ... *
மதநன்தந்தைநம் - வலையில்சிக்கத் ... ... ... ...*
தந்திரமுண்டதைச் - சாற்றக்கேண்மின்... ... ... *
சுந்தரமிகுதிருச் - செந்தூரில்வாழ் ... ... ... ...*
கந்தசுவாமியைக் - கண்டுதெரிசித்தே ... ... ... *
உந்துநம்கருத்தை - புனாத்துத்துதித்ததால் ... ...*
அந்தத்தேவனம் - ஆத்மநாயகற்கு... ... ... ... *
கந்தமருகனம் - காதலுமறிவார்... ... ... ... ...*
ஆதலாற்சென்றந் - கவர்சந்நிதியிலா ... ... ... *
மோதமாய்த்துதிப்போ - மொய்குழலீரோ ... (ய)

### பொதுவசனம்.

யாவரும் ரசிகசிகாமிணி சொல்வதை ஒப்புக்கொண்டு திருச்செந்தூருக்குப் புறப்படச் சம்மதிக்கிற

### கந்தபத்தியம்.

ஆகாவிதுசரிசரியை யோகாநுபவம்... ... ... ...*
பொருந்தயுக்தியுமிதுவே... ... ... ... ... *

நாகாபரணன்மகனிடமாய்ப்... ... ... ... ...*
போவோமெனஸ்ரீசெயந்தி புரமதையுறுவார்... ...(௰௧)

பொதுவசனம்.

இவ்விதமா யாவருஞ் சம்மதித்து திருச்செந்தூருக்குப் போகிறபோது சகத்திலகம் மார்க்கத்திலிருக்கும் தங்குமிடங்களையும் நதிகள் திவ்விய க்ஷேத்திரங்களின் வரலாறுகளையுஞ் சொல்லிக்கொண்டு போகிற விதங்காண்க.

தரு-புந்நாகவராளி ராகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

வாருங்கள்சோதரிமார்களே - செந்தில் ... ... ...*
வாழ்குகனைத்துதிப்போம் ... ... ... ... ... *
பாருங்களிந்தப் - பதியின்பாரம்பர்யம் ... ... ...*
பாதவசிரோஷ்டர் - பவனவரிசையை ... (வாருங்கள்)
துப்புக்கிசைந்தநல் - லற்புதமாகிய ... ... ... ...*
உப்பளமாமிதுபாரீர்-சற்றுத்... ... ... ... ... *
தூரத்திலேவெயில் - நேரத்திலேதங்குந் ... ... ...*
தோப்பிருக்குதங்கேவாரீர்-அதன் ... ... ... ... *
பக்கம்முத்தையபுரம் - முள்ளக்காடதோ... ... ...*
பாரும்மதகரியாறு - இந்தப்... ... ... ... ... *
பாதையிலீதொரு - வாதையிதற்கப்பால் ... ... ...*
பார்ப்போங்காயல்ஒருவாறு - அதோ... ... ... *
செப்பமாய்த்தோணுங் - குருவித்துறையதற் ... ...*
கப்புறங்காண்போமுக்காணி - மகா...... ... ... *
தேவன்சடையினில் - மேவியகங்கையில் ... ... ...*
சேஷிந்தாம்ப்ரபர்ணிகாணீர் - இங்கே...... ... ... *
அப்பணிவேணிய - ராகும்சோமநாத... ... ... ...*
ரைப்பணிந்துகூடியரோகம் - சந்திரன்... ... ... *
ஆறிய ஆத்தூ - ரிதில்வாழ்பவர்க்குண்டு ... ... ...*
ஆரோக்கியதேகசுபோகம் - பாரும்... ... ... *

ஒப்பற்றசுப்ரமண் - யப்பெயர்கொண்டிடும் ... ... *
ஊரிதாறுமுகனேரி - இதில்... ... ... ... ... *
உள்ளசான்றூரந்த - வள்ளல்க்ருஷையினுல்... ... ...*
ஒங்கினூர்பாக்யங்கள்மீறி - இனி ... ... ... ... *
ஓகோவெகுதூரம் - வந்தலமப்புறம்... ... ... ...*
ஒங்குமிதுநமதுக்ஷண்முகபுரம் ... ... ... ... *
உடனேயினிச்சேர்வோம் - அடலார்குகனூர்வம்... ...*
பெறவேயருள்புரிவார் - திருவாசொழில்மடவீர். (வா) ()

## பொதுவசனம்.

இவ்விதமாகத் திருச்செந்தூருக்குப் போய்ச்சேர்ந்து கார்த்திகேயன் சந்நிதானத்தில் அவரவர் மனோபீஷ்ட சித்திக்காக ஒவ்வொருவர் ஒவ்வொரு ஸ்தோத்திரக் கண்ணி பாடுகிற விதங்காண்க.

## சுகந்ததிலகம்

உசேனிராகம் - அடதாளசாப்பு

கண்ணிகள்.

பூமடந்தைக்குயிர்ச்சூத்திரமாய் - அலர் ... ... ..*
பாமடந்தைக்கிருநேத்திரமாய் ... ... ... ... *
மாமறையோரும் - புகழ்செந்தில் ... ... ... ...*
மாநகர்மேவுங்குருபர... ... ... ... ... ... *
ஐயா-முருகையா - கண ... ... ... ... ... ...*
துய்யா-வருள்-மெய்யா - யெம ... ... ... ... *
தன்பனாச்சேரவரந்தருவாய் - மன... ... ... ...*
மின்புடன்வாழப்புரந்தருள்வாய்... ... ... .. (௫௩)

## சுகுணபூஷிணி.

பாரின்மனுக்கள்கனிந்துவரும் - சுக்ர ... ... ...*
வாரங்குமாரர்மகிழ்ந்துதரும்... ... ... ... ... *
பேரழகான - திருச்சேவை ... ... ... ... ...*
பூரணமாகக்கண்டே-லெங்கள் ... ... ... ... *

தீரன் சுகுமாரன் - திள ... ... ... ... ... ...*
வாரன் சுருதசோரன் - தனைச்... ... ... ... ... *
சேர்ந்தணைத் திசுகம்பெறவே - யருள் ... ... ...*
வாய்ந்தவள்ளிமகிழ்ப்ரபுவே... ... ... ... ...(௰௪)

## மதுரபாஷிணி.

பேரின்பக்கூத்தன்மகனே - புனதருள் ... ... ...*
பெற்றுயவரந்தருவாய்குகனே ... ... ... ... *
நாரமதினிலே - துயின்றது ... ... ... ... ...*
வாரகாபதியே - யணைந்திட... ... ... ... ... *
நன்னினேன் - உன்னிய... ... ... ... ... ...*
எண்ணம்நிறைவேறவே... ... ... ... ... ... *
நாரணன்மருகா - வெழுந்தருள்வாய்-பரி... ... ...*
பூரணிசுதனே வரந்தருவாய் ... ... ... ... (௰௫)

## நித்யகல்யாணி.

தேவர்சிறைமீட்டசேவகனே - புனைச் ... ... ...*
சிந்தித்தபேர்பவபாவகனே ... ... ... ... ... *
ஆவின்கன்றுமேல - விளவுதிர்த்த... ... ... ... ...*
தேவனென்னமாலே - யறிந்தென்... ... ... ... *
அன்பாய்மகிழ் - சம்போக ... ... ... ... ...*
இன்பாய்செய-வென்பால்வர... ... ... ... ... *
ஆதரித்தருள்வேலவனே - உக்ர... ... ... ... ...*
மாதரிக்குறுபாலகனே... ... ... ... ... (௰௬)

## நடனசுந்தரி.

சீரலைவாய் வீற்றிருப்பவனே - ஜெய... ... ... ...*
ஆரலைநோற்போர் தவப்பயனே... ... ... ... *
காதலனிமேனிக் கடவுளைக்... ... ... ... ... ...*
கண்டிடவே-நீ-அருள்புரி... ... ... ... ... *

சனதுங்கா-பவபங்கா-இனியெங்கள்... ... ... ...*
மனமங்கா-ஸ்ரீதமுருகுந்தனைக்... ... ... ... ... *
காட்டித்தாராய்-தருமமேமிகுந்திட... ... ... ...*
நாட்டவாராய்...... ... ... ... ... ... (௰எ)

சந்திர பிம்பாநநி.

உன்மாமன்சித்தினைநீயதிவா-யன்றி... ... ... ...*
யென்போலியார்களேவருணர்வார்... ... ... ... *
செம்மான்மகளைத்-தினைப்புனத்திற்... ... ... ...*
சென்றவளைமருவிய... ... ... ... ... ... *
சீலா-வடிவேலா-சிவ... ... ... ... ... ... ...*
பாலா-ஜெகசாலா-வேனை...... ... ... ... ... *
ஸ்ரீதரன்வந்தணைந்திடவே-அருள்...... ... ... ...*
மாதவத்தோர்க்கருட்கடலே... ... ... ... ...(௰அ)

பூலோகரதி.

கானலைநீயானமானினங்கள்-ஓடிக்... ... ... ...*
கண்டிடாதேமருள்-கொண்டதுபோல... ... ... *
ஞானசுதாகாரனைத்தேடி... ... ... ... ... ...*
நாங்களும்-நாடி...... ... ... ... ... ... ...*
வந்தோமதனாலெந்தன்-பால... ... ... ... ... *
விந்தநாயகர்மேவிட... ... ... ... ... ... ...*
நல்லருள்தருவாய்முருகா-இம... ...... ... ... *
வல்லிசோதரன்தன்மருகா... ... ... ... ...(௰௯)

ரசிகசிகாமணி.

பெண்கட்கணிகலம்-பேதமையென்பதை... ... ...*
யெங்கட்கதிபரமிர்திருந்தும்... ... ... ... ... *

கண்கொண்டுபார்த்தா-ரிலை...... ... ... ... .. *
தேவகுஞ்சரிகேத்த-மனோகரா ... ... ... ... *
தேவனேநன்-மானுயாவனே ... ... ... ... ...*
கோவிந்தன்... ... ... ... ... ... ... ... *
சேர்ந்தணைந்திடவேயருள்வாய்-அவர்... ... ... ...*
சார்ந்திருக்குமிடம்புகல்வாய்.... ... ... ... (௨௰)

## யாவருங்கூடித் தோத்திரிக்கின்ற

## அகவல்.

அகிலசராசரத்-தமர்ந்தப்ரம்மாண்ட... ... ... ...*
சகலபுவனமுந்-தங்குமெண்டிக்கிலும்.... ... ... *
மன்னுநாற்றோற்ற-வகைப்படியமைப்பின்... ... ...*
இன்னுயிர்க்குயிராய்-ஏகமாயிலகி... ... ... ... *
அளித்தும்புரந்தும்-அழித்தும்சொலித்தும்,... ... ...*
ஒளித்துங்காட்டியும்-உறைந்தும்நிறைந்தும்... ... *
குன்றுதோறாடலும்-கொண்டுசெந்தூரில்... ... ...*
வென்றிவேல்வீர-விக்கிரமனாக...... ... ... ... *
வந்தசேவகனே-வழிபடுதொண்டர்... ... ... ...*
சிந்தையுள்விளக்கே-தேவாதிதேவே... ... ... ... *
சின்மயக்கனகச்-செட்டுசெய்பவர்க்கு ... ... ...*
நன்மலர்ப்பாத-நாணயவாணி...... ... ... ... *
காட்டியுணர்த்துக்-கருவழுக்கொழித்துத் ... ... ...*
தேட்டமாங்கதிநிதி-சிறந்தருள்வோனே... ... ... *
இஷ்டகாம்யார்த்த-மெனும்பொருள்நிறைந்த ... ...*
பெட்டகம்போலப்-பிறங்கும்ஆலயம்வாழ் ... ... *
செட்டிபண்டாரியாய்த்-திரைகடற்கரையில்... ... ...*
சிட்டருக்களிக்குந்-திருமுருகோனே ... ... ... *
ஆநந்தநடனம்-ஆடிடுமடியார்... ... ... ... ...*
மோநத்தமடைய-முன்னிருந்தாட்டும்... ... ... *

நட்டுவனுகி-நயநபாவத்தால் ... ... ... ... ...*
ஒட்டுவிட்டகற்றி-உட்கொளும்பரம..... ... ... *
சித்ராயெழுந்த-தேஜோமயனே ... ... ... ...*
சத்ருஸம்மார-ஷண்முகத்தேவே... ... ... ... *
கண்ணனெம்மிடம்வரக்-கண்டிலோமதனுல்... ... ...*
உண்ணலணிதல்-உறங்கல்துறந்து... ... ... ... *
பார்லெங்கணும்போய்ப்-பார்த்துங்காணேம் ... ...*
சிருயர்மந்த்ர-நகரினிற்செறித்து ... ... ... ... *
தேடிப்பார்த்துமெத்-தேவனில்லாததால்... ... ...*
நாடிவந்தனமுன்-னற்சந்நிதிக்கு... ... ... ... *
எம்மனோரஞ்சிதர்-இருட்பிடமறிந்து... ... ... ...*
மம்மர்நோய்தீர-வரந்தந்தருள்வாய்...... ... ... *
வேலாபோற்றி-விமலாபோற்றி... ... ... ... .. *
நாலாகமத்தி-னடுவேபோற்றி... ... ... ... ... *
கந்தாபோற்றி-கடம்பாபோற்றி... .. ... ... ...*
நந்தாசெந்தூர்-நாயகாபோற்றி...... ... ... (உக)

செந்தூரன்-ராஜஸ்த்ரீகளுக்கு வரப்பிரசாதந் தருகிற

சீசமாலை.

குவலயாதிபர்வம்ச-கோமளமாத்ரே... ... ... ...*
கோவிந்தன்மேல்மையல்-கொண்டுவெருவாய்... ... *
சிந்தைநொந்தே-திரிந்தென்பாலடைந்தனிர்... ... ...*
உமதுப்ராணேசராம்-நமதுமாமன்...... ... ... *
எங்குமிருப்பவர்-இந்திரியநிக்ரகம் ... ... ... ...*
செய்தவர்பக்கல்வி-சேஷப்ரியமாய்... ... ... ... *
தங்குவாரன்றியும்-தனையுபாசிக்கின்ற... ... ... ...*
பக்தர்கள்பஜனையில்-சிரத்தையுடனே ... ... ... *
சந்ததமிருந்துதா-சர்க்குப்புத்ரபௌத்ர ... ... ...*
நிநகநகவஸ்துவா-கநமுமருளி...... ... ... ... *

ஆயுராரோக்யமும்-அருள்வதற்கங்ஙனே ... ... ...*
வீற்றிருப்பாரிந்த-மேதினிக்குள் ... ... ... ... *
திருமந்த்ரநகரினில்-திரிகரணவிமலமாய் ... ... ...*
யாவத்கிரியைகளும்-யாதவற்கே ... ... ... ... *
அற்புதஞ்செய்கின்ற-ஸத்பக்தியாஸ்பதி... ... ...*
பார்த்தசாரதியெனும்-பக்தன்மனையில்... ... ... *
இன்றுயேகாதசிக்-கங்கெழுந்தருளுவார் ... ...*
சென்றுநம்ப்ராண-நாதனைக்கண்டேபாத... ... *
நாட்யதேசிககாந-கோலாட்டமாடி ... .. .. *
உங்களிஷ்டமா-மருவியேதங்குவீரே... ... (௨௨)

மதுரபாஷிணியும்-சுகுணபூஷணியும் சொல்லுகிற

தரு-ஆநந்தபைரவிராகம்- ஆதிதாளம்.

பல்லவி.

தந்தனஸ்தரிசநமே-நம்துதிக்கி... ... ... ...*
சைந்தனனுதினமே... ... ... ... ... *
சரவணபவகுக-னமதரிமருமகன்... ... ...(தந்த)

அநுபல்லவி.

அந்தரிதருபுத்ரன்-அன்பர்கள்மகிழ்மித்ரன்... ... ...*
அழகியசெந்தில்-வருகுமரேசன் ... ... ... ... *
வநசரிகுஞ்சரி-யிருவர்கள்நேசன்... ... ... ...(தந்த)

சரணங்கள்.

வாரும்மந்த்ரநகரைநாடி-அதில்... ... ... ... ...*
வாழ்பாடிபார்த்தசாரதியுறுமனைதேடி ... ... ... *
சாருவோமங்கேபக்தர்கூடி-ஏகா... ... ... ... ...*
தசிபஜனைசெய்வார்-சந்தகாநங்கள்பாடி... ... ... *
ஆரமுதனையீரே-அவருடல்சேர்ந்துநேரே... ... ...*
அரவரதமு-நம-திபணாமருவ... ... ... ... *
நடையிலேயினிநம-தகமிகமகிழ... ... ...(தந்த)(௨௩)

நித்யகல்யாணியும்- நடநசுந்தரியும்

பஜனை கோஷ்டியைப்பார்த்துச்சொல்

விருத்தம்.

அரிஹரிப்ரமாநந்த-மாயிதைவிட்டுநாதா ... ... ... *
பிரியவேதினைப்பதுண்டோ-பேதமையாலலைந்தோம்...*
சரிசரியிதுவேவாய்ப்பு-சந்தமாய்நாம்கோலாட்டம் ... *
வரிசையாய்நின்றடிப்போம்-வாருங்களரிவைமாரே (உச)

பொதுவசனம்.

இவ்விதமாக- பஜனை ஸபாசித்விலாசத்தைக் கண்டுமகிழ்ந்தவுடன் கோலாட்டம் ஆரம்பிக்கின்றபோது சுகந்தநிலகம் சுவாமியைத்தோத்தரிக்கின்றது.

கந்தபத்தியம்.

நாலாகியமறைமுடிவிலும்...... ... ... ... ...*
மேலாகமமதிலுணர்ந்து-மேவிடவொண்ணாக்... ... *
கே...லாகலமேலாகிய...... ... ... ... ... ...*
பாலாழியில் துயிலுகின்றபரமாபோற்றி... ... (உரு)

சுகந்தநிலகம்-அடாணா-அடதாளசாப்பு-தாளகதி.

கண்ணிகள்.

தேவாதிதேவர்க்குமேன்மேலா-எந்தன் ... ... ...*
சிந்தைக்குகந்தபரிபாலா... ... ... ... ... *
தேவகிபாலா-துதித்தவர்-செயபாக்கியசீலா... ... ...*
ஆவலுடன்தினம்-உந்தனை ... ... ... ... ... *
மனம்வந்தனை-செயும்எந்தனை... ... ... ... ...*
குணங்கொண்டணை ... ... ... ... ... ... *
தீரகோவிந்தாசேகரா -சுர ... ... ... ... ... ..*
வாரவிந்தைசகோதரா... ... ... ... ... ...(க)

உள்ளக்கருத்தினை - வள்ளலறியாதோ... ... ... ...*
ஓசோவிதுவே - மகாகுதோ ... ... ... ... *
பிள்ளையாம்மாரன் - செலுத்துகின்ற... ... ... ...*
பேரதிகாரம் - மாற்றுவிக்க ... ... ... ... *
ப்ரியமென்றே - இதுநன்றே... ... ... ... ...*
அருள்கொண்டா - தரியிலீறு ... ... ... ... *
பேதையேல்மயல்நோய்தீராய் - ஜெக ... ... ...*
நாதநானம்பினேல்வாராய்... ... ... ... ...(௨)
யாவர்மனதையும் - நீயறிவாய் - கிருஷ்ண... ... ...*
தேவனையணைந்தார்பிரிவார் ... ... ... ... *
ஆவல்பெருகி - புனைக்கா... ... ... ... ... ...*
ஞதேபுள்ளுருகி... ... ... ... ... ... ... *
வருந்துகிறேனெந்தனை நீ ... ... ... ... ... *
வந்தணைவாயுந்தனை நாலம்பினேன் ... ... ... ...*
தேவகிதேவிபாலகனே - மண ... ... ... ... *
மேவுநித்யகாதலனே ... ... ... ... ... (௩)
தாசஸ்பாடிபார்த்தசாரதியை-வெகு ... ... ... *
நேசமாய்க்காக்குந்தயாநிதியே... ... ... ... ...*
காசினியுண்டதிருவாயா ... ... ... ... ... *
தேசுரகண்டஜெகத்துக்கோர் ... ... ... ... ...*
காரணவெண்மனப் ... ... ... ... ... ... *
பூரணநாரண ... ... ... ... ... ... ... ...*
காமிநானுய்யமாலைதாராய் - எந்தன்... ... ... ...*
சாமிநான்கொண்டமாலைதீராய் ... ... (௪) (௨௬)

சுகுணபூஷிணி - தோத்திரக் - கந்தம்.

வாவாயென தும்னேகா ... ... ... ... ... ...*
வாவாசுரமோதியிதயவாசா - ஜெகநா... ... ... *
தாவாவுனதிருச்சரணினை ... ... ... ... ... ...*
நாவாரவழுத்துகாமி - நானென்சாமீ ... ... (௨௭)

தரு-சுருட்டிராகம்-ஆதிதாளம்-தாளகதி.

பல்லவி.

ஆமோ-இந்தப்பராமுகமெந்தன் - அந்தர்யாமியே

அநுபல்லவி.

சாமிவருக - நேமிவருக ... ... ... *
சரசமிகவே - கலவிசெயவே ... (ஆமோ)

சரணங்கள்.

நீவந்திருந்தகாலத்திலுனை... ... ... ... ... ...*
நிந்தைசெய்தேனோ - அன்றி... ... ... ... *
தாவந்தீரக் - கூடவில்லையென்று ... ... ... ...*
தாழ்வுசொன்னேனோ - உனை ... ... ... ... *
வாவென்றன்பரழைக்கநீயு... ... ... ... ... ...*
வந்துபோகையால் - என்... ... ... ... ... *
மாதவவுனையணைந்துங்காமம்... ... ... ... ...*
வாவரப்புதிதாகுதாகையால் ... ... ... (ஆமோ)
பூமனைத்தந்த - தாமலாபுந்திப்... ... ... ... ...*
புண்யதேவனே - ஸஹஸ்ர ... ... ... ... *
நாமதுளவத்தாமனே - கண்ய... ... ... ... ...*
நந்தபாவனே... ... ... ... ... ... ... *
காமன்குறும்பாலுந்த-ஆசைக்... ... ... ... ...*
கடலிலாழ்கிறேன் ... ... ... ... ... ... *
சாமிநீமனமிரங்காததையிட்டு-நி...... ... ... ..*
னைந்துவிரக - முயர்ந்துமாழ்கிறேன் ... (ஆமோ)
நாடியபக்தர நுகோஷ்டி... ... ... ... ... ...*
நல்விலாசனே - அவர்... ... ... ... ... ...*
நன்மனையில்சின்மய ... ... ... ... ... ... *
சதனுவுல்லாசனே - ஸ்ரீ ... ... ... ... ...*
பாடிபார்த்தசாரதிதொழும்... ... ... ... ... *
பரமநேசனே - மிகப்.. ... ... ... ... ...*
பண்புடனித-மென்பரிவினில் ... ... ... ... *
பதியவதியு-மதிவிசுவாசனே... ... (ஆமோ) (உ௲)

எடுப்பதற்கிசைந்தவார்த்தை யியம்பினேற்கூடுமட்டும்
அடுத்ததைஎடுத்தும்பார்த்து அப்புறஞ்சொல்வேனையே.

வசனம்.

கேளாய் ஐயே நீவைத்தமோடியை நானெடுக்காமல்போன இளக்காரங்கண்டதினாலே மிகுந்த எக்களிப்பாய்த் துடுக்குகள் பேசுகிறாய் அதிருக்கட்டும் நீவைத்தமோடியெடுக்க எனக்குச்சாத்தியப்படும்படியான தந்திரத்தைச்சொல்வாயாகில் அதையெடுத்தும்பார்த்துப் பிறகு நடக்கவேண்டுங்காரியத்தைச் சொல்வேனையே.

மனோநாயகன் சுதீமணிக்கு விருத்தம்

இராகம் பந்துவராளி.

இதுவரையெடுத்தகட்டத் திற்பரியாயருண்டு
புதிதுபூரணமாம்விட்டேன் பொன்னனையேயுன்சித்தம்
அதினிலேமும்மூட்சுத்வ மடைந்துநிஷ்காம்யமாகப்
மதனமாயநுஷ்டித்தால்நீ யாங்குடனெடுப்பாய்பெண்ணே.

வசனம்.

கேளாய்பெண்ணே நீ கடந்த ஸ்தானங்களிலெல்லாம் சாமாந்யபதிகளுண்டு இது பூரணகட்டமாகையால் மும்மூட்சுத்வமடைந்து நிஷ்காம்யமாய் அநுஷ்டித்துச்சென்றால் அந்த ஸ்தானத்தை யடைவாய்பெண்ணே.

சுதீமணி விருத்தம்.

இராகம் காம்போதி.

பஞ்சவிந்த்ரியஷ்டகர்மப் பகைவென்றுநிஷ்காம்யத்தால்
நெஞ்சினைஸ்தம்பித்திங்கு நீவைத்தகுறியையிப்போ
சஞ்சலமின்றிநானே தடையிலாதெடுத்தேனிந்த
விஞ்சையாம்மோடியிந்தா மிகமகிழ்ந்தேகொள்வாயே.

வசனம்

கேளாய் ஐயே நீ சொன்னபடியே ஐம்புலக்கள்ளரை ஆத்மசுத்தமென்னும் காவலில்வைத்து துஷ்டகர்மசத்துருக்களைசாதன

சதுஷ்டயச் சேனைகளைக்கொண்டுவென்று சித்தசுத்த மேளாகாதக் காரமாய் நீ வைத்தகுறியை இதோஎடுத்தேன் வாங்கிக்கொள்வை யையே.

சுதிமணி ஜோசியின் நிஜரூபங்காட்டும்படி அபேக்ஷிக்கின்ற

சிங்காரபத்தியம்.

தேவாதிதேவனே திவ்வியமாபுருஷனே
யாவனோ வெங்கிருந்திங்குவந்தாய்
அன்றியின்னுள்வனா யறிந்தமந்திரசக்தி
பலியாமல்போகுமோ பாரின்மீது
தேவியைப்பூஜித்த திவ்வியாநுகூலமிப்
போதுசற்றேவிவான் புதுமையென்ன
க்ஷீரநாதன்மகள் சுதிமணியென்கின்ற
நாமமேஒருகோடி நேமஜெபமே
ஆகையாலுந்தனிஜ ரூபமாகவென்முன்னிற்கி
லப்பொழுதென்மனம் நிலைமைகொள்ளும்
எங்கள்குலமாகிலுன் னிருப்பெந்ததலமோ
சொல்லுவாயென்றன் முனேமாய்த்தருகஜோசி.

சவிபிரசந்ந தரு இராகம் மோகனம் ஆதி.

பல்லவி.

பிரசந்நமாகினனே திவ்யபுருஷன் பிரசந்நமாகினனே

அனுபல்லவி.

சுரர்முனிவர்களாக வரதமுந்துதிசெய்யும் மருமலரடிநிறை தாணியின்மிசையுற (பிரசந்ந)

சரணம்

சதுர்ப்புஜமுமணிமகுட சேகரமும்தாங்கிய முகமதியோங்கி யிலகவே தங்குசங்குசக்ராயுதந்தங்கிய இங்கிதாபய கரங்களும்வ ங்கிய தாசர்க்கருள்புரி நேசன்இருள்பலு நாசன்சுகுணர் விசுவாச ன்மகிழ்வுடன். (பிரசன்ன)

சுதீமணி தோத்திரவிருத்தம்

இராகம் — நீலாம்புரி.

அரிஹரிபிர்ம்மாந்த ஆகமமுதலேபோற்றி
அரனதுவாமபாகத் தமபிகைசோதராநின்
அரியதோர்சேவைகண்டேன் அகத்துயர்யாவும்விண்டேன்
அரிமகள்கணவாவுன்றன் அடியிணைபோற்றிபோற்றி.

சவிகந்தார்த்தம் இ-ம் மத்தியமாவதி.

வாராயிளமயிலேயினி யாராகிலுமெனதுநாம மதைமனதி னிலே சிராகநினைத்திடுவாரெனில் வாரமாயவர்பக்கல் வந்துகாத் தளிப்பேன் விரைவாயுவந்துள்ளங்களிப்பேன் மதியில் நீயெனை யுன்பதியெனநினைத்தால் ததியிதெனக்கொண்டுன் துதிக்கிசைந் தேனிதுபோல் வந்துகாத்தளிப்பேன் விரைவாயுவந்துள்ளங்களி ப்பேன்.

சுதீமணி கந்தார்த்தம்.

அப்படியிலையெனில் கடவுளாயெப்படியுனையேழை பங்கனெ ன்றுரைசெய்வார்தப்புறுமென்றன்தெளியம திப்படிச்சொற்பிழை தீர்த்துக் காத்தென்னைச்சிறப்பாய் உன்தருட்கண்பார்த் தென்னை ப்புரப்பாய் தீர்த்தபூரிதநிறத் தேவதாசன்பாடி பார்த்தசாரதியை ப்பார்விக்கும் பரமேஷ்ட்டி காத்தென்னைச்சிறப்பாய்.

பொதுக் கொச்சகம்.

க்ஷீரநாதன்மகள்சுதீமணி நன்மாதவத்தால்
வாரமுடன்மாதவனும் வந்துமணந்தேபார்த்த
சாரதிசெய்யும்பஜனை சபாசித்வி லாசமதில்
ஏராரமயப் ப்ரதாநமீகின்றனனே

சிறப்புப்பாயிரம் அகவல் நேரிசை ஆசிரியப்பா

இராகம் - காம்போதி.

உலகமாதுக்கெழில் உபயநேத்திரமாய்
ஜலஜாஸநிச்ருபா ஸத்மாத்திரமாய்

ஓங்கியசென்னை யொண்பதியுடையான்
தாங்கியாதரிக்கும் தண்கிருபையாளன்
நவநீதசோரனை நாளும்ஆசரிக்கும்
புவனப்ரகாசப் புனையணிகலத்தான்
கமலாலகோத்திரக் காருண்யவள்ளல்
அமலனும்பாடிரங் கயசிரோமணியின்
புத்ரபாக்கியமாய்ப் பூமியிலுதித்து
மித்ரபந்துத்வம் மிகுந்தவர்வாழும்
மந்த்ரமாநகரில்வந்து கோவிந்தன்
சந்தமார்பஜனைத் தாரணைகாட்டும்
மார்த்தசாரதி யெனும்பார்த்திபனே
வச்சிர்த்தியாம்மோடி விருத்தாந்தச்செய்யுள்
செய்தனன்றிருக்கலை சைப்பதிதெய்வச்
சிகாமணிச்சிறுநாவலனே

சம்பூர்ணம்.

மங்களம் பூரிகல்யாணி அடதாளசாப்பு.

பல்லவி.

ஜெயமங்களம் சதாநித்ய சுபமங்களம்

அநுபல்லவி.

நயகுணர்வாழ்மந்த்ரநகர் சங்கராமேசர் வியன்பாகம்பிரியாட்கல் விமலிசோதாருக்கு (ஜெயமங்கள)

சரணங்கள்.

தேசஞ்செழித்திட மங்களம் ஜெக ராஜசெங்கோலுக்கு(மங்)
மாசமும்மாரிக்கு மங்களம் மந்த்ரமாநகர்ப்பிரபுகட்கு (மங்)
வாசமார்துளபமார்பன் வைகுண்டபதி தாசன்யாடிபார்த்த
சாரதிதீரனுக்கு. (ஜெயமங்களம் நித்யசுபமங்களம்)

பஜனஸஹாவிலாசக் கிரந்தம் சுபமஸ்து.

## மதாபாஷிணி - தோத்திரகீதம்.

பாலகோபாலஸ்த்ரீலோல - பரமசீல ... ... ... *
நாதஅதிமோதவரதாதநவில்சுபோத ... ... .. *
ஞாநமுனிமாநஸேந்தாஸ நந்தகூன... ... ... ... *
ஈசபிரகாச - மிருநேச-எதுகுலேசா ... ... (௨௧)

தரு-செஞ்சுருட்டிராகம்-அடதாளசாப்பு-தாளகதி.

பல்லவி.

சாமியெந்தல் காமந்தீர்க்கதாமசமாமா - பரந் ...*
தாமவரசோமகுலசாருவபூமா... ... ...(சாமி)

அநுபல்லவி.

மாமறைகள்புகழ்கின்ற - த்வாரகாவாசா-நந்தன்... ...*
பூனவியசோதைக்குப்பாச - மகனேசர்வேசா (சாமி)

சரணங்கள்.

சந்த்ரகுலந்தனிலுதித்தமந்த்ராதரா - கூவும் ... ... ... ...*
சாமஜவரதா எந்தன்மாமனேஹரா... ... ... ... ... (சாமி)
ஆர்த்தர்பந்துவென்றுசொல்லும் - கீர்த்தியும்பொய்யோ-உன்னை...*
அண்டினபேர் - கண்டுகொள்ளாதாவதேதையோ ... ...(சாமி)
கார்த்திகேயன்மாம்பாடி - பார்த்தசாரதி-தாசனை... ... ... *
கீர்த்திபெறக்காக்கவருள் - பூத்தவாரிதி ... ... ..(சாமி) (௨௨)

## நித்யகல்யாணி - தோத்திரம்.

சம்பக - விருத்தம்.

சகலசராசரத்திலுறு ... ... ... ... ... ... *
ஸ்தாவரஜங்கமுமானவஸ்துநீ... ... ... ... ...*
இகபரமோக்ஷசாதன... ... ... ... ... ... *
மெலாந்தனதாயுள ஏகவஸ்துநீ ... ... ... ...*
புகலபரோக்ஷவஸ்துவுநீ ... ... ... ... ... *
பொய்ம்மையதானபரோக்ஷவஸ்துநீ... ... .. *
தகதரமெய்மனப்பரிவை ... ... ... ... ... *
நானினிசொல்வதெல் நீபதிந்திடே... ... ... (ஈக)

தரு-தனுசிராகம்-ஆதிதாளம்-தாளகதி.

பல்லவி.

சோமகுலாம்புதிபூரண - சசாங்கா... ... ... ...*
தாமசமேனீவாராய் - கிருஷ்ணா ... ... ... *

அநுபல்லவி.

வாமிருக்மிணிசத்ய - பாமைமனோகர... ... ... .. *
காமிதார்த்தபல - தாயகமுரகர ... ... ... (சோம)

சரணங்கள்.

சொர்ன்னக்குடங்கள்போ - லுன்னியல்தனங்களின் ... *
சொகுசும்அழகும்விருதா - எந்தன் ... ... ...*
மன்னவனையுந்தன் - மார்பணையாவிடில் ... ... *
என்னைப்போல - [illegible] ... ... ... ... ...*
முன்னமொருதிவசம் - உன்னையணைந்தவச ... ... *
மோகம்பெருகுதெந்தன் - ஆகம்உருகுது ...(சோம)

பஞ்சவரநுதின - மஞ்சலிசெய்திடத் ... ... ... *
தஞ்சமளித்ததேவா - அழகிய ... ... ... ...*
வஞ்சித்தொளபதிக் - கெஞ்சவிலாக்கலை... ... ... *
வருத்தியமாநுபாவா ... ... ... ... ... ...*
சஞ்சலமிகமயல் - மிஞ்சுதெதன்செய்வேன் ... ... *
சாரஸநேத்ரா - கார்நிறகாத்ரா ... ... (சோம)

நாடியநல்லவர் - தேடுசுமித்ரன் ... ... ... ... *
நவையறுநவபக்தன் - ஜெநநம் ... ... ... ...*
வாடிடச்செய்திடக் - கூடுநிகர்வம்... ... ... ... *
தோடுறையமலசித்தன் - ஸ்ரீ .. ... ... ... ...*
பாடிபார்த்தசா - ரதிதுதிதாயக ... ... ... ... *
நாட்டமானவென் - னகமுறுநாயக... (சோம) (ஈ௨)

## நடனசுந்தரிதோத்திரம்.

### கட்டளைக்கலிப்பா.

உவணவாகியிலூர்கில் றநாயகா... ... ... ... .. *
வுத்தமாவுனைநத்தியபத்தர்கள் ... ... ... ... *
பவநமேவியிருந்தவர்சந்ததம்... ... ... ... ...*
பாக்கியம்பெறஆக்குவிட்போனெனை... ... ... *
தவளவாரிஜமாதருள்பெற்றவர்... ... ... ... .. *
தாந்துதித்தனர்யான்துதிசெய்வதிப்... ... ... *
புவனமீதுன்செவிக்கேறவில்லையோ... ... ... .. *
புண்ணியாவெந்தன்கண்ணினுட்கிருஷ்ணனே...(௩௩)

ஓரடிதரு-கேதாரகௌளராகம்-அடதாளசாப்பு-தாளகதி.

### பல்லவி.

திருமாதுறைமார்பினனே - யுனையான்... ... *
தெரிசிக்கவேவாராய்... ... ... ... ... ...*

### அநுபல்லவி.

வருவாரினிலுற்ற - ஒருபாறையுதித்த... ... ... *
மருவார்குழல்கற்றை - மடவாள்துதிபெற்ற ... (திரு)

### சரணம்.

நாராயணனெனும் - பேராலஜாமளன்... ... ... *
சீரார்மகன்போனா - ஓர்கால்சொலஅவன் ... ... ...*
ஞாலத்திற்புரிகோடி - பெரும்பாவம் ... ... ... *
ஓலமிட்டதேபோடி - உனையெந்த ... ... ... ...*
நாளுமெனவந் - தாளுவாயென... ... ... ... *
நானினைப்பது - நீமனத்தினை ... ... ... ... ...*
நண்ணிநிலனெ - தெய்வம்நான்செய் ... ... *
புண்ணியப்பல - கெண்யமல்லவோ... ... ... ...*
நாதனே நீசாருவாய் - தேவதாப்ரக் ... ... ... *
யாதனேயெனச்சேருவாய் - ஆசையுடன்... ... ...*

நாட்யகாந - கோலாட்டமாடி ... ... ... ... *
நாடினே னுன்னருளைநேடி ... ... ... ... ...*
நாற்றிசைபுகழ்கின்றபாடி ... ... ... ... ... *
பார்த்தசாரதிபக்தன்மேடி... ... ... ...(திரு) (௬௪)

சந்த்ரபிம்பாநநி - தோத்திரம்.

வஞ்சிவிருத்தம்.

சந்ததமெனையாள்... ... ... ...*
இந்திரைகணவா... ... ... ... *
அந்தரர்வாழ்த்தும்... ... ... ...*
சுந்தராபோற்றி... ... ... ... *

தரு- யமுநாகல்யாணிராகம் - ஆதிதாளம்-தாளகதி.

பல்லவி.

தாங்கவசமா-உன்மையல்-தாங்கவசமா... ... *

அநுபல்லவி.

வாங்குபூபாரமதைத் - தாங்குஞ்சேஷிசயனு ...(தாங்க)

சரணங்கள்.

நீலமேகனே - என்மாநஸம் - நிற்கும்ஏகனே ... .. *
ஞாலமாதுமோகனே - நளினவஞ்சியாகனே... (தாங்க)
தேவர்சேகரா - தயையும்அன்புஞ் - சேர்ந்தசாகரா .. *
தவிய துன்பப்பனி - தகிக்கும்திவாகரா ... (தாங்க)
பாடிபார்த்தசாரதி - பஜனைகோஷ்டிமானஸா... ... *
பிஷ்டமளிக்குந்தாத - தாஷ்டிகவேணுநாத(தாங்க) (௬௫)

பூலோகாதி - தோத்திரம்.

எழுசீர்க்கழிநெடில் - ஆசிரியவிருத்தம்.

கலைமாதுமாமி - மலர்மேவும்வாமி... ... ... ...*
காந்தாசுசீல - சாந்தா ... ... ... ... ... *
உலைமேவும்வெண்ணெ - யதுபோலவெள்ளை ... ...*
உன்மையல்செய்யுதைடா... ... ... ... ... *

துலையாதவேதை - புறவானுளோரை... ... ... ...*
துன்பஞ்செய் - வம்பர்தஞ்ச... ... ... ... *
சிலையையெடுத்துக் - கணையேவிடுத்த... ... ... ...*
ஸ்ரீகிருஷ்ணமூர்த்திபோற்றி ... ... ... (௫௫)

தரு-பரசுராகம்-மிசிரதாளம்-தாளகதி.

பல்லவி.

கோபாலனே - ரம்யசரச - குணசீலனே... ...*

அநுபல்லவி.

ஆய்பாலிருக்கப் - பேய்பால்முலைதை... ... ... ...*
யருந்திசிவனை - புகழ்ந்தசுதேவனே... ... (கோபால)

சரணங்கள்.

யோகபுருஷ - ஞியசிவன்மகிழ்... ... ... ... *
தியாகவருஷனே... ... ... ... ... ... ...*
மேகசாமள - ஆதகோமள ... ... ... ... ... *
விந்தஅநகனைத் - தந்தஜநகனே ... ... (கோபால)
பனகசயநனே - சூர்யசந்த்ர ... ... ... ... *
பாவநயநனே ... ... ... ... ... ... ...*
விநயவந்தன - மனமுவந்தெனை... ... ... ... *
விரகந்தீரவே - மருவிச்சேரவா ... ... (கோபால)
வாட்டுதேகாமம் - என்மனதினில் ... ... ... ...*
நாட்டுதேஎமம் ... ... ... ... ... ... *
பாடிபார்த்த-சாரதிதிகழ்... ... ... ... ... ...*
பஜனைகோஷ்டியில்-சேரவேமகிழ் (கோபால)(௫௭)

ரசிகசிகாமணி-தோத்திரம்.

கந்தபத்தியம்.

கோவிந்தாசாதல்மீறுது ... ... ... ... ... ...*
வாவந்தாதுனைதுபாத - வநஜக்களோயென் ... ... *
தாவந்தாபாரம்நீங்கிட ... ... ... ... ... ...*
லவந்தாகூத்திலொர்ற்றியமகிழ்வேனே... ... (௫௮)

தரு-முகாரிராகம் - அடதாளம்-தாளகதி.

பல்லவி.

வாராய்ஜெகதீசா - என்மேல்கிருபை ... ... *
பாராய்பவநாசா ... ... ... ... ... .. *

அநுபல்லவி.

ஆராரறிவாருன் - பேராரல்மகிமையை... ... ... *
அகிலலோகா-தாரகர்த்தனே ... ... ... ... ...*
அரவுசேகர-மதனில்நிர்த்தனே ... ... .. (வாராய்)

சரணங்கள்.

மாதாவானய - சோதாதேவியின்... ... ... .. *
மனமகிழ்ந்திடக்குறும் - பநந்தஞ்செய்கோலனே.. *
சூதாயைவ - ரநாதியாகச்செய்த .. ... ... ... *
துரியனொடுவரு - படைகள்காலனே ... ... ...*
துஷ்டநிக்ரக - சிஷ்டர்பாலனே... ... ..(வாராய்)
தேசாதேசங்களெங்குந்தேடினேன் - செந் ... ...*
தூர்வளரும் - குகன்றனைநாடினேன் ... ... *
ஆசாபாசம - டங்குதில்லையுன்மேல்... ... ... ...*
அரிகரிசுர - வரதனேயெனும் ... ... ... ... *
ஆனைமேலபி - மானசுகுணனே ... ... (வாராய்)
கோடிபாநுதேஜனே - துதி... ... ... ... ... *
கூடும்பக்தஸமாஜனே... ... ... ... ... ...*
வாட்டமில்பாடி - பார்த்தசாரதி ... ... ... ... *
மாநஸந்தனி - லேநிதந்தொழும்... ... ... ...*
வள்ளலேயென - துள்ளமகிழவே ... (வாராய்)(௬௬)

யாவருங்கூடித் துதிக்கின்ற
பன்னிருசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மதமால்யானைமருப்பொசித்து ... ... .. ... *
மாயச்சகடமிதித்திறுத்து ... ... ... ... ...*
மல்லருயினாநமற்கருத்தி ... ... ... ... ... *
வஞ்சக்குருகின்வாய்பிளந்து... ... ... ... ...*

கதமேமிகுத்தகஞ்சனுயிர் ... ... ... ... ... *
கடிந்துதாதைவகதேவன் ... ... ... ... ...*
கமலவிதயமலர்வித்துக் ... ... ... ... ... *
கௌர்திபாலலாவலாச்சத ... ... ... ... ...*
ததரும்புரந்துதருமகே ... ... ... ... ... *
தனத்தைநாடிவருவோர்கள்... ... ... ... ...*
தல்லையடைந்தோர்சகலவித... ... ... ... ... *
சௌபாக்கியம்பெற்றுய்யவருள்... ... ... ...*
பதுமவதநநயநஹஸ்த... ... ... ... ... ... *
பாதபாத்தாமாதீன ... ... ... ... ... ...*
பத்துவானவடமதுனைப் ... ... ... ... ... *
பதியாய்வாராய்வாராயே ... ... ... ... (சவ)

சுவாமி-பிரசந்ந-தரு-பத்துவராளிராகம்-ஆதிதாளகதி.

பல்லவி.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்திவந்தார் ... ... ... ... ... *
திருவருள் அமரர்கள்-மலர்மழைபொழியவே ... ...*
தினமனதினிவினை-யரிவையர்மகிழவே... ... (ஸ்ரீகிரு)

அநுபல்லவி.

மாக்குலைபமிகவோங்க ... ... ... ... ... ...*
மந்தகாசமுந்தாங்க... ... ... ... ... ... *
ஸ்ரீகரமிகத்... தேங்க ... ... ... ... ... ...*
சிரமிசைகரமொடு... ... ... ... ... ... *
அடியவர்நதிதொழ ... ... ... ... ...(ஸ்ரீகிரு)

சரணம்.

கொண்டையில்ரத்நச்சுட்டி... ... ... ... ... *
குப்பிமயில்கண்பீலி ... ... ... ... ... ...*
குவலயமெக்குமிலங்க... ... ... ... ... ... *
கோலநெற்றியினில்கஸ் ... ... ... ... ... ...*
தாரித்திலதமும்மூக்... ... ... ... ... ... *
குத்தாளமுந்துலங்க ... ... ... ... ... ...*
கண்டத்திலிட்டுமார்பில் ... ... ... ... ... *
கவுஸ்துபமசையவே... ... ... ... ... ...*
காசினிபுண்டபண்டி ... ... ... ... ... *
தேசுடவிசைடவே ... ... ... ... ... ...*
அரமதிலம்படை - யுரமொடுபரிந்து... ... ... *

கநகாம்பரமிடை - யதனிலேதரித்து ... ... ...*
கனிவொடு - தனதென... ... ... ... ... ... *
மனமுவந்திடவ... ... ... ... ... ... ...*
காதசிபஜனேயில்... ... ... ... ... ... *
தாசரோத்திடவே... ... ... ... (ஸ்ரீ கிரு) (சக)

யாவருக்கும் பொதுவான ஸ்தோத்திரத் தேவாரம்.

அரிஹரியெம்மையாண்ட - ஐயனேபோற்றிபோற்றி... ... ...*
மூரகாயாவற்றிற்கும் - முதல்வனேபோற்றிபோற்றி ... ... *
நரஹரிபோற்றியெங்கள் - நாதனேபோற்றிபோற்றி... ... ...*
வாருணநிதியேயன்பர் - மாமனோகரனேபோற்றி... ... (சஉ)

சுவாமி - திருவுளம் பற்றுகிற - கீர்த்தம்.

வாரீர்தாசர்களேநீர்... ... ... ... ... ... ...*
வாரீர்நமதிஷ்டம்வேண்டும் ... ... ... ... *
மங்கையரோநாம் ... ... ... ... ... ... ..*
சீரார்நம்பக்தன்மனையினில் ... ... ... ... *
ஏர்பெறவெப்போதும் ... ... ... ... ... ...*
வாழ்வோமின்பத்துடனே ... ... ... (சங)

தரு-மங்கலம்-மிலகரிராகம்.

பல்லவி.

மங்களம்-சுபஜெய... ... .. ... ... ...*
மங்களம் - மங்களம் ... ... ... ... ... *

அநுபல்லவி.

அங்கையில் - சக்ரனுக்கும் ... ... ... ... ... *
எங்கள் ஸ்ரீகிருஷ்ணனுக்கும் ... ... ... (மங்களம்)

சரணங்கள்.

நாரதன்முதல்பக்த - சிரேஷ்டர்க்குமங்களம்... ... *
வாரிதிசூழ்புவி - யோர்கட்குமங்களம் ... (மங்களம்)
கார்வாழக்கங்காகுலத் - தோர்வாழஅவர்செய்யும் ...*
ஏர்வியாபாரமும்வாழ-எல்லோர்க்குமங்களம் (மங்களம்)
பாடிபார்த்தசாரதி - கிரீடிக்குமங்களம்... ... ... *
வாட்டமில்லிச்செய்யுளை-வாசிப்போர்க்குமங்களம் (மங்)

கோலாட்டப்பாடல் - முற்றிற்று.

ஸ்ரீ ரஸ்து.

# மோடி விருத்தாந்தம்.

## காப்பு.

நாட்டை

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியம்.

மோடியென்றொருபேர் முன்னுளபேர்கள் மொழிந்ததன்பொருளறியாமல், நாடியோர்பொருளை வைத்தலும்வைத்த நற்பொருளதையெடாவண்ணம், கூடிமந்திரம்யான் ஜெபித்தலென்றனாக கொள்கையான் விவரமாச்சொலவாய்ப், பாடியிலுதித்துவளர்கண்ணன்மருகன் பதமலர்க்கஞ்சலிசெய்வாம்.

வரலாறு

இராகம் - சங்கராபரணம்.

எழுசீர்க்கழிநெடில் ஆசிரியம்.

ஸ்ரீரநாதன்றன்புத்ரியாகியசு தீமணியென்னுமோர்குறத்தி
வாரிதியதனிலறிதுயில்கொள்ளு மாயனைமணந்திடவேண்டி
சீரினிலுயர்ந்தமந்த்ரமாநகர்வாழ் சிற்பரையர்த்தநாரித்தாய்
வாரிசப்பதமாநஸத்திநற்றொழுது வருகின்றகாலையில்மாதோ.

வசனம்

ஸ்ரீரநாதன்புத்ரியாகிய சுதிமணியென்னும் ஒருகுறத்தி மகாவிஷ்ணு தனக்குப் புருஷனாகவேண்டுமென்று மந்த்ரநகரில்வாழ்கின்ற ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்டநாயகியாகிய அர்த்தநாரீசுவரியைப் பூஜாவிதிக்கிரமம் வழுவின்றி அநுதினமும் பக்திசிரத்தையுடன் பூஜித்து நமஸ்கரித்துக்கொண்டு வருகிறகாலத்தில் மேல்நடந்ததுகாண்க.

பொதுக் கொச்சகம்

இராகம் புன்னாகவராளி.

மாதவனோர்நாளின்மனோ நாயகனென்றவ்வநிலைத
ஜாதிவேஷங்கொண்டு தன்னந்தனிவந்து

மாதரசேயுன் வரலாற்றைச்சொல்லென்று
ஆதரவாய்க்கேட்டதுவும் அவள்செயலுஞ்சொல்வேனே

வசனம்.

மகாவிஷ்ணுவாகிய வைகுண்டபதி ஒருநாள் அந்த ஸ்ரீயி னுடைய ஜாதிவேஷந் தரித்துக்கொண்டு அவளிடத்திற்குவந்து பெண்ணரசே நீ இத்தனை மனவுறுதியுடன் தேவிபூஜைசெய்கின் ற வரலாற்றைச் சொல்லென்றுகேட்க அவள் தத்தேகத்தியானமா யிருந்ததைப்பற்றி ஒன்றும் பேசவில்லையாகையால் நிஷ்டைசமாப் தமாகிறவரையில் அவர் அவிடத்தில்தானே காத்திருந்ததும் அவ ளும் பூஜாவிதியை நடத்திக்கொண்டிருந்ததும் மேல்நடந்ததுங் காண்க.

பூஜை தரு
இராகம் புன்னாகவராளி ஆதிதாளம்.

பல்லவி.

பூஜைபுரிந்திருந்தாள் அர்த்தநாரிதேவி பூஜைபுரிந்திருந்தாள்

அனுபல்லவி.

ஆசையடக்கியசுப்ர காசருமதிசயிக்க ஆகமவிதியிலேநினைந்தநதி விளைவாய்ப்பவிக்க (பூஜை)

புனிததீர்த்தத்தைநாடி களபத்ரவ்யம் பூசிமஞ்சனமாடி ஆ சாரத்துடனினி தானபட்டுடுத்து திவ்யவாசனையெழி லானமா லைதொடுத்து இளமேனியில் கனிவாய்விபூதிதரித்து ருத்ராட்ச மும்நா காபரணமும்பரித்து உள்ளும்புறமும் மனதிலொன்றாகநி னைத்து அர்த்தநாரியா மாதேவியையாவாகநித்து அருத்தியுடன் மாசறுபாத்தியர்க்கியம் ஆசமநஸ்நாநம்வஸ்த்ரம் வாசகந்தபுஷ்ப ம்தூபம் தேசுறுதீபநைவேத்தியம் வண்மையுள்ளதாம்பூலம் உண் மையானநமஸ்காரம் வாடைமிகுபுஷ்பாஞ்சலி ஷோடசோபசார முடன். (பூஜை.)

சுதிமணிசொல் தேவாரம் தக்கேசி.

என்னையாளுடையதேவன் ஏகபாகத்திருக்கும்
அன்னையேயுனதுபாத அம்புஜமலர்கள்போற்றி

முன்னம்வானவர்க்குவேண்டி முதுகடலமுதளித்த
மன்னவனெனக்குவாய்க்க வரமருள்செய்குவாயே.

இருநாழிநெல்லைக்கொண்டே யெண்ணான்கறம்பாலித்த
அரியலோகத்தாயேயுன் அழகியபாதம்போற்றி
சுரிகுழலுமையேயுனறன் சோதரன்ப்ரசன்னமாகி
வருகவுமடியாடன்னை மருவவுமருள்செய்வாயே.

மனோநாயகன்வருகிற பொதுவிருத்தம் இ-ம் - தோடி.

மருடியோர்கையிற்றூக்கி மாதரிக்கோலுமேந்தித்
தருசங்குக்காப்பு முத்துச் சரப்பளிபூண்டுபூத
சகஜலயபவக்யோகத்தின் தனிவிருதுடனேகொக்கின்
மிசுமிறகினைப்பூண்டாடி வீரஜோகியும்வந்தானே.

மனோநாயகன்கொலுத்தரு இ-ம - தோடி ஆதிதாளம்.

தாம் - தாம் தகஜேகிண ஜெம்தரி தகுந்த குகுந்தகிலுக தரி கிடநாதரி தீம் - தீம கிடகிலலானதக்தரி திமித தகிடஜெணு தக ததிங்கிணதோம்.

மிருவிக்ரமஆவேச மதிவிப்ரமப்ரகாச வீரஜோகிநானே.

வெகுதுடுக்குகள்செய்யும மிருதுஷ்டப்பேய்களும் வெகுண்டுவோடவெருட்டும ப்ரசண்டமந்த்ரத்தாற்கட்டும். (மிருவிக்ர)

கோளும்றுப்புதைத்தபா தாளத்தினிடசேபத்தைக் கொண்டு வரப்பூதத்தையேவுவேன் மனங் கூசிட நொடியினிலகாசினியிருண்டிட கொடியமாயப்பொடியைத்தூவுவேன் நீளிக்குவலயந்தில மீளாசகடியரவின் நெற்றிமணியைமார்பில தரிப்பேன மங்கர நெரியுமசேங்க்ரதந்த்ர குறியுஞ்சின்னைகிறைந்த நிபுணனெனுங்கீர்த்தி வரிப்பேன் வாளெயிற்றுவெண்பூதம் நாளுமெனைவணங்க வல்லகுட்டிச்சாத்திகள் வந்தென்பணிக்கிணங்க வலிமைசெலுத்தியசுததவீரனென உலகமெச்சுபுகழ்பெறறதீரனும். (மிருவிக்ரம)

மனோநாயகன் நிஷ்டையிலிருக்கிற சுதீமணியை வர்ன்னித்தல்.

சீசபத்தியம் - ஆனந்தபைரவி.

அறவெனும்பொருளிக்க ஆபினைறக்கேசொந்தம் பிறர்வனப் பிவள்தந்தவிரவலாகும் சந்த்ரபிம்பத்திலாஞ் சனமிருக்கிறதினால்

இவள்முகத்திற்கிணை யென்னசொல்வேன் இவள்மேனியொளியி னுக்கிணைமினைச்சொல்லலாம் உடன்மறைவததனிடத் துற்றகுற் றம் மன்மதன்மகிழுமிவள் ஸ்தங்யமென்றுவமிக்க அணிவதுங்க ளைவதுமதனுள்குற்றம ஆடையாலிவளைவர்ங்கிகில ஆதிசேஷன் நா க்கிரண்டாயிரம்பெற்ற நன்மையாகும் உள்ளபடியேயென்னுள்ள த்தைக்கொள்ளைகொள்ள பிரமன்விட்டானே யாதென்று பேசு வேனே.

மனோநாயகன் சந்தேகித்தல் கொச்சகம் இ-ம் புன்னுகவராளி.

கல்லாருமென்மனதைக் கலைக்கக்கண்காட்சிதந்த
வில்லார்நுதலியிவள் மேனகையோசுந்தரியோ
எல்லாரும்ஞானவர சேகவிடுத்துக்காம
வல்லாரரசியற்ற வாயிழையாய்வந்தாளோ.

வசனம்.

ஓகோ என்னசொல்வேன் கல்லைப்போலிருக்கும் என்மன தைக் கலைக்கக்காட்சிதருகின்ற இவள் இந்த்ராணியோ - மேனகை யோ - அன்றி ஞானச்செங்கோல் நடத்துகின்ற எனக்குக் காமச் செங்கோல்நடத்தும்படி கட்டளையிட எனக்கெதிர் தரிசனந்தரவ ந்தாளோ யாதொன்றுந் தெரியவில்லையே - ஓகோ என்னசொல் வேன்.

மனோநாயகன் நிச்சயங்கொள் கொச்சகம்.

இமைப்புமுடலசைப்பு மில்லாதிருந்தாலும்
சுமைப்புடவிமீதிவள்மெய் தொட்டிருப்பதாலிவட்கும்
அமைப்பெனக்குமுன்னுள்ள தாலிமமலைக்குறத்தி
எமைப்புணரவேண்டிதவம் இங்கியற்றுகின்றுளே.

வசனம்.

ஒகோ என்னஆச்சரியம் இவள் தியானத்திலிருப்பதினால் ச ரீரம் அசையாமலும் கண்ணிமையாமலுமிருந்தபோதிலும் இவள் சரீரம் பூமியில் படிந்திருப்பதினாலும் எனக்கும் இவளுக்கும் ப்ரா ப்தம் இருப்பதினாலும் எனக்கு வாழ்க்கைப்பட இங்கே மாதவம்

அநுஷ்டித்துவருகிறாள்போல் தோற்றுகின்றது ஆ, ஆ வெகுபாக்யம மகாசந்தோஷம.

பொதுவிருத்தம் - இ-ம் கல்யாணி.

இப்படியையன்சொல்லி எதிரேநின்றிருந்தபோதும்
மைப்படிகண்ணிருடன் வசந்தப்பிப்பரவசத்தில
ஒப்புறமானஸதனை ஒடுக்கியிந்திரியக்கோள்கள்
தப்புறஅர்த்தநாரி தாபைத்தியாகித்திருந்தாள்.

வசனம்.

இப்படி மனோநாயகன்கண்டு தெளிந்து நிற்கின்றவேளையிலும் சுதீமணி நிராநிஷ்டை ஸமாப்தமாகாமல் ஸ்தம்பித்திருந்தாள் மேல் நடந்ததுகாண்க.

சுதீமணிநிஷ்டைகூடி கண்ணைத்திறந்துபார்த்தவுடன்
மனோநாயன் சுதீமணியுடன்சொல் சிசபத்தியம் ஆனந்தபயிரவி.

எனதுநேத்ரோத்ஸவ மிசைந்ததிருவுருவமே எவ்வநக்கிள்ளையே இன்பரதியே, மதனகுடோரியே மாதங்ககமநியே சரசவுல்லாசசுத் சுரதமணியே, சையோசபாத்ரியே தமநீயசாத்ரியே அங்கஜன்தொண்டுசெய்யமுதவடிவே, ஞானமானதுகசப் பானதாமென்னமெய்க் காமமேயினிதெனக் காட்டுமயிலே, இங்கேநீவந்த காரியமேதுவன்னைப், பெற்றதாய்தந்தையாருனது பேரையுமநீ இங்குபுரிகின்றபூஜையே தென்னவேண்டி, எனதுமனமகிழவுரையடி யினியமாதே.

சுதீமணி விருத்தம் இ-ம் மோகநம்.

ஆமடா குமாரஜோகி ஆருமில்லாவிடத்தில்
கோமளமாதரார்கள் கூடியதலத்திலொன்றி
யாய்மனோதைரியத்தோடிங் கடைந்ததேபெரியகுற்றம்
தாமசமின்றியோடித் தப்பிநீபிழைத்துப்போடா.

வசனம்.

ஆமடா ஜோகி யவ்வனபுருஷனாயிருக்கிற நீ யவ்வநஸ்த்ரீகள் கூடியிருக்கிற இந்த இடத்திற்குத் தனியேவந்ததே பெரியகுற்றம்

அப்படியிருக்க நீ யென்னை யாரென்றும் தாய்தந்தை பேரென்ன வென்றும் நீ செய்கிறபூஜையின் விபரமென்னவென்றும் கேட்கிறாயே இது வெகுவேடிக்கையாயிருக்கிறது நான் ஆரானால் உனக்கென்ன அதைக்கேட்க உனக்குவந்த அவசியமென்ன நீ சீக்கிரமாய் இவிடம்விட்டுத் தப்பிஓடிப்போடா ஜோகி.

இதுவுமது இ-ம் சாவேரி.

பின்னையுஞ்சொல்லச்சொல்லப் பேசாமலிருக்கிறாயே
மன்னியவழியைவிட்டு மயங்கிநீநிலைக்கின்றாயோ
அந்யதாவந்தபோதும் அவரவர்வழியைநோக்கி
இன்னினியேபோகாமல் என்னநீபார்க்கிறாயோ.

வசனம்.

என்னடாஜோகி நான்கேட்டதற்கு ஒன்றுஞ்சொல்லாமல் உன்மத்தங்கொண்டுநிற்கிறாயே நீ வழிதப்பிவந்து விட்டாயா அதவா அப்படியேவந்தபோதிலும் நீ வந்தவழியை நோக்கிப்போகாமல் நிற்கிறாயே நீ என்னபார்க்கிறாய்சொல்லடா ஜோகி.

மனோநாயகன் விருத்தம் இ-ம் பந்துவராளி.

எனதுகண்ணோர்பெண்மார்பில் இருக்கின்றசெவியிரண்டும்
நனிமிகர்மதுரச்சொன்மே னடினஅதர்மநாவும்
கனியிதழுற்றநெஞ்சக் காமிநியரும்போகத்தின்
இனிமைமேலுற்றதாலே இப்படிநின்றேன்பெண்ணே.

வசனம்.

கேளாயடிபெண்ணே எனதுகண்களிரண்டும் இங்கேஇருக்கிற ஒரு பெண்ணின்மார்பில் பதிந்திருக்கின்றன செவிகளிரண்டும் அவள் மதுரமாகிய சொல்லின்மேல் படிந்துவிட்டன எனது உதடும் நாக்கும் அவள் அதரக்கனியினுடைய ருசியைநாடி வியாபித்திருக்கின்றன இவற்றிற்கெல்லாங் காரணமாயிருக்கிற மனமோ அவள் கலவிபோகஸாம்ப்ராச்சியத்தின்மேல் ஸகித்திருக்கின்றது நான்ஸ்தம்பித்துநிற்காமல் என்னசெய்வேனடி பெண்ணே.

சுதிமணி விருத்தம் இ ம் பந்துவராளி.

வாயினில்வந்தமட்டும வம்புகள்பேசவேண்டாம
ஞாயமில்லாமற்பேசி னுனக்கதற்குத்தக்க
தாய்க்கிடைக்குமபோபோவுன் சண்டியாட்டங்கள்போதும்
சீயினியிங்கேநிற்கா தேயோடிப்போடாஜோகி.

வசனம்.

அடாஜோகி நீ உன்வாயில்வந்தமட்டும் குட்டிக்குறும்புகள் பேசுகிறாய் ஞாயவிரோதமாய்ப்பேசினால் அதற்குத்தக்க வெகுமானம உனக்குக் கிடைக்கிறதாயிருக்கும் சீ நீ யின்னமும் இந்தக்குட்டிக்குறும்புகள்பேசாமல் ஓடிப்போடா ஜோகி.

மனோநாயகன் விருத்தம் இ-ம் பயிரவி.

கந்நியர்க்கரசேயென்சொற் சுளிவுடன்க்ஷமித்துக்கேள்நீ
மன்னியபுலன்கள்வென்று மாடசிமையாகப்பூசைக்
குன்னியவரலாறெல்லாம் ஒளியாமற்சொன்னாலந்த
நன்னயத்தேவன்வந்து நாடுவார்கூடுவாரோ.

வசனம்.

கேளாயடி ஸ்த்ரீகள்நாயகமே நான்சொல்லுகிறதைச் சாந்தமாகக்கேள் நீ இப்போது இந்த்ரியநிக்ரகம்செய்து மகோந்நதபக்தியுடன் பூஜாவிதிகளை அநுஷ்டித்துவருகிற காரணமென்ன அதை உண்மையாய்ச் சொல்வாயாகில் நீ விரும்பியிருக்கிறதேவன் உடனே பிரத்தியட்சமாவாரடிபெண்ணே.

சுதிமணிவிருத்தம் தன்னியாசி.

தேசநாயகமதாகும் திருமந்த்ரநகரில்வாழும்
ஈசனார்தேவியான எழிலர்த்தநாரித்தாயை
பூசனைபுரிந்துமாயோன் புனையகலத்திற்றோய
ஆசையாயிருக்கின்றேனென் ஆற்றலீதறிவாயையே.

வசனம்.

தேசங்களுக்கெல்லாம் சிரோரத்நம்போன்ற திருமந்த்ரநகரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அர்த்தநாரீசுவரியை மகாவிஷ்ணு

எனக்குப் புருஷனாய்வரும்படி வரப்பிரஸாதம் தந்தருளவேண்டு மென்று அநுஷ்டித்துவருகிறேன் இதுதான் நான்கொண்டிருக்கிற கருத்தடா ஐயே.

மனோநாயகன்விருத்தம்
இ - ம் - கேதாரகௌளம்.

ஷோடசஸகஸ்ரகோவித் துடுப்பினாலடிக்கப்பட்டான்
நாடியதாருகாவ னரிஷிகள்தவங்கெடுத்தான்
வாடிடைமாதேயுன்னெவ் வநமும்ஒய்ந்திடக்கெடுப்பான்
நீடியஅவன்ஜாலத்தின் நெறிசொல்லேன்கேளாய்பெண்ணே.

வசனம்.

ஓகோ - பளா - பளா - சபாசு வெகுநன்றாச்சுது நீ உனக்கு ப் புருஷனாகவேண்டுமென்று விரும்புகிற அந்த விஷ்ணுவினு டைய உருட்டும்திருட்டும் புரட்டும் அநேகமுண்டு அதில் சில வற்றைச் சொல்லுகிறேன்கேள் அவன் வெகுகோடி குறும்புகள் செய்து பதினாறாயிரம்கோபிகள்கையினால் துடுப்படிகொண்டான் மகாதவசிகளாகிய தாருகாவனத்துரிஷிகள் தன்னைமதிக்கவில்லையெ ன்று அந்த நாற்பத்தெண்ணாயிரம்பேர்களுக்குமுன்பாக தானொரு மோகினிப்பெண்வடிவெடுத்து அவர்களைத் தன் மையல்வலைக்குள் விழும்படிசெய்து அவர்களை அநியாயமாகக்கெடுத்தான் இதுபோ லவே உன்னிடத்திலுஞ் சூதுகள்செய்து மயக்கி உனது யவ்வநத் தையுங்கெடுப்பான் ஓகோ இப்படிப்பட்ட மழுகூழைமாயக் கண் ணனுக்கு நீ பிரியப்பட்டது வெகுவேடிக்கையாக இருக்கிறது ஆ ஆ ஆ சபாசடிபெண்ணே இன்னமுஞ்சொல்லுகிறேன் கேளடி பெண்ணே.

மனோநாயகன் சொல்தரு
இ - ம் - நாதநாமக்கிரியை ஆதிதாளம்.

பல்லவி.

ஓகோஇதென்னமதிமோசம் நீ ஒப்பலாமோஅவனை ரவலேசம்.

அநுபல்லவி.

ஆகாதகார்யமி தல்லவோபெண்ணே அவன்திருக்கெல்லாம் மொழிவேன்கேள்கண்ணே (ஓகோ)

வெண்ணெயுண்டவாயால் மண்ணைத்தின்றுனந்த வேசையா லன்னையசோதனையவனைக்கிட்டி தின்னதைக்காட்டென வின்னி னைககாட்டினன் திருடனவனைப்போல ஒருவருண்டோதடி.(ஓகோ)

இடைச்சியர்குளிக்கிற தடத்தில்நுழைந்தவர் இங்கிலைகளை க்கரங் தெடுத்துக்கொண்டோடப்பின் தொடுத்தம்மனைக்குடன் அடுத்துவந்தவள்மீது துஷ்டப்பாம்பெடுத்து விட்டகுறும்பனடி. (ஓகோ)

பாரதப்போரினில் பாண்டவர்க்குவேண்டி பலதந்த்ரங்கள் செய்துகுலங்குலைத்ததுமன்றி ஷாரியாரதைப்போல மோகங்கொண்ட ஒப்பற்றருக்கனும் தப்பியேயுமல்லோ. (ஓகோ)

தாசன்பாடிபார்த்த சாரதிமேல்விசு வாசம்வைத்திருந்தும் நேசமில்லான்போல வேஷங்கொண்டிபரம ராசிபனுனது வேடிக் கையலல்லவோ நாடிக்குறிக்கிலடி. (ஓகோ)

மனோநாயகன் விருத்தம்

இராகம் - பைரவி.

ஆமடிபெண்ணேயின்னம அனந்தமுண்டவன்குறும்பு
போமதுநிற்கவிட்டுப் பூவையாவனுக்குண்டு
நீமனங்கொண்டான்மாத்ரம நிறைவேறுமோஉன்னெண்ணம்
காமினியுனக்குவேறே கணவனுகாதோபெண்ணே.

வசனம்.

கேளாயடிபெண்ணே நீ விரும்புகிறபுருஷனுக்கு - எட்டுதேவிமார்களுண்டு அப்படிநீ அவனைச்சேர்ந்து வாழவினைத்தால் கூடிவருமோ என் இத்தனைசல்லியம நீ வேறே ஒருகணவனைத்தேடிக்கொண்டா லாகாதோபெண்ணே.

சதிமணி விருக்தம்

இராகம் - காம்போதி.

மாமரமாகவொன்றும் பகராதேயெனக்குக்கோபம்
ஆமவரேயெனக்கு ஆசைமாப்பிள்ளையாவார்

7

மாமறைபுகழுமந்த மாநுபாவரைக்குறித்து
நீமதியீனமாக நிகழ்த்துதல்சரியோபோடா.

வசனம்.

கேளாய்ஜோகி சர்வத்திற்கும் காரணபுருஷன் அவரேயாகை யால் ஒவ்வொரு காரணகாரியநிமித்தியம் அவர் இந்தத்திருவிளை யாடல்களெல்லாஞ் செய்திருக்கலாம் - நீ பாமரமாகப் போக்கு நீக்கின்றிப் பேசவேண்டாம் அவரே எனக்குச்சித்தமாய் மாப்பிள ளையாவார் நீ சொல்லவேண்டாம்போடா விருதாவில் வாக்குவா தம்பண்ணவேண்டாமடா ஜோகி.

மனோநாயகன் - விருத்தம்
இராகம் சாவேரி.

மாயவன்தொட்டாலுன்மேல் மணக்குமோவளர்ந்துபோமோ
நேயமாய்நான்தொட்டாலுன் நிறைமினுக்குகளும்போமோ
காயஜன்மயக்கத்திற்குக் கணிசமும்பெருமையுண்டோ
சேயிழையேகாந்தர்வம செய்துநாமணேவோமவாடி.

வசனம்.

கேளாயடிபெண்ணே நீ விரும்பியிருக்கிற அந்த மகாவிஷ் ணு உன்னைத்தொட்டால் உன்னுடம்பு பரிமளித்துப் பூரிக்குமோ நான்தொடடமாத்திரத்தில் உன் பூரணப்பகட்டுகள் மழுங்கிப்போ மோ மன்மதவிகாரம்பூண்டகாலத்தில யவ்வநபுருஷனும் ஸ்த்ரீயு ம எதிர்ப்பட்டால் கணிசமும் - கற்பும் - விரதமும் பாராட்டிக் கொண்டிருக்கலாமோ ஆகையால் நாம் இப்போதைய அவசரத்து க்குத்தக்கபடி காந்தர்வவிவாகமாகக் கூடிவோமவாடிபெண்ணே.

சுதிமணி இஷ்டதேவியைநினைத்துப் பிரலாபிக்கின்ற விருத்தம்

இராகம் ஆகிரி.

அரகரசிவசிவாவென் னம்மையேயென்னபாவம்
கரவடன்சொல்லென்காந கடூரத்கைவளர்க்குதையோ
திரிபுரதகநியுன்னைச் சேவித்தபலனிதாமோ
உருகுதென்னெஞ்சமம்மா உத்தமிகாத்திடாயே.

மந்திரசக்தியுந்தன் மைத்துனனென்றுசொல்லும்
எந்தன்பேர்நீஇம்மோடி யெடுத்ததன்பின்சொல்வேனே.

வசனம்.

கேளாயடிபெண்ணே பந்தயம்வென்ற தந்திரத்தினாலே இன்ன சாமர்த்தியம் இன்ன பரம்பரையிலுள்ளவனுக்கு உண்டென்று யூகித்தால் அறியலாம என்னுடைய வஸ்திராபரணங்களினாலே என்குலத்தையறியலாம் நீ செய்த சபதத்துக்குத் தோற்றுப்போனதினாலே என்னை உன்மைத்துனனென்றறியலாம் என்பேணா நீயிந்தமோடியையெடுத்தவுடனே சொல்வேனடி. பெண்ணே.

சுதிமணி அர்த்தநாரீஸ்வரியை நினைத்துப் பிரலாபிக்கின்றது

இ - ம - புன்னாகவராளி அடதாளம்.

பல்லவி.

அம்மணியென்தாயே இப்போதிந்த ஆபத்தைக்காப்பாயே (அம்)

அனுபல்லவி.

நிர்மலிதேவியரா சக்தியுனை நினைத்தும் மனதினில் குறித்த துயலியாதோ (அம்ம)

சரணங்கள்

உந்தன்சகோதரனை மணந்திட வுன்னினதறியாயோ இந்த மோடியைநான் எடுத்திடாமற்போனால் வந்துநின்றஇந்த வஞ்சகன்தொடுவானே (அம்ம)

ஆதிமுதலாக உன்பாதம் அநுஷ்டித்ததற்காக ஆதரவாய்வந்தடுத்திடலாகாதோ நீதியில்லையோயென் நிலைகெட்டுப்போகாதோ. (அம்ம)

உள்ளமுருகிமெய்மாய் கந்நியாமென் உடலும்பதறுதையோ அள்ளிலைவேற்கண்ணி அந்நியமாயென்னைத்தே அம்மாஇப்போது வாராமுகம்பண்ணாதே (அம்மணியென்தாயே)

பொதுவிருத்தம்.

இராகம் எதுகுலகாம்போதி.

செயலற்றுவிழ்ந்தாள்நற்சு திமணிஅர்த்தநாரி
தயவுடன்கனவில்வந்து தரிசநந்தந்துபெண்ணே
பயமுறவேண்டாமந்தப் பண்புள்ளமாயஜோகி
அயலலவென்றனண்ண னுமெனஅருள்செய்தாளே.

வசனம்.

இவ்விதமாகச் சுதிமணி மூர்ச்சையாய்ச் சோர்ந்துவிழ்ந்து கிடக்கிறபோது ஸ்ரீ அர்த்தநாரியம்மன் திருவுளங்கொண்டு அவள் கனவில் பிரசன்னமாகி பெண்ணே அஞ்சவேண்டாமென்று அபயந்தந்து இப்போது ஜோகியாய்வந்திருக்கிறவன் அயலானல்ல அவன் என் சொந்தசஹோதரனுகிய வைகுண்டபதியாம் உன்சிறந்தபக்திக்கு மிகவும் மெச்சினேன் நீ அவ்விடத்திற்குப்போய் மோடிக் கட்டுவிடும்படிகேட்டு எடுத்துக்கொடுத்துச் சேர்ந்து சுகமா யிருப்பாய்பெண்ணே.

பொதுவிருத்தம்

இராகம் கல்யாணி.

தேவியிப்படிசொல்லச் சுதிமணிதெளிவுகொண்டு
பாவியேன்ஜந்மமிப்போ பாவநமாச்சுதென்று
மாவியப்புடனேயந்த மந்த்ரஜோகியின்பாற்சென்று
மேவியவாறும்அங்கே மேல்நடந்ததுஞ்சொல்வேனே.

வசனம்.

ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரி இவ்விதமாகக் கனவில்வந்து அபயப்ரதானந்தந்து அந்தரத்தியாநமாய் விட்டவுடன் சுதிமணி மூர்ச்சைதெளிந்தெழுந்து திரிலோகஜநநி தரிசனத்தினுல் ஜெநநசாபல்யமாச்சுதென்று ஆநந்தங்கொண்டு மனோநாயகனிடத்திற்குப்போனதும் மேல்நடந்த வரலாறுங்காண்க.

சுதிமணி மனோநாயகனுக்கு விருத்தம்

இ - ம் அசாவேரி.

எடுக்கமாட்டாமல்போன இளக்காரமறிந்தாவிந்த
துடுக்குமாத்திரமோசொல்வாய் தொட்டுநீவைத்தமோடி

கிணிதோள்விஷ்ணுவே தேவாநின்னைப்
பணிவேனிதனைப் பாதுகாத்திடவே.

அநாகதம்.

மூக்கோணஅநாகத மொய்சுழல் ருத்திரீக்
கொக்குமணாளா உருத்திரதேவா.
திக்கெலாங்கட்டிச் சிக்காரத்தானான்
கக்கமாட்டெதிர்த்தோர் களைத்துவிழ்ந்திடவே.

விசுத்தி.

அறுகோணவிசுத்தி அமர்ந்தமகேசுவரிக்
குறுநாயகனே யோதும்வகாரம்
பெறுநற்பொருளே பேதையேன்னைத்த
குறியையொருவரும் கொளாமனிதடுவே.

ஆக்கினை.

ஆக்கினைசக்கரத் தமர்ந்தமனோன்மணித்
தாய்க்கினைநாயகா சதாசிவாயகார
மாய்க்கடல்சூழ்ந்த வையகநிறைந்தாய்
காக்கயான்வைத்தவிக் காருடப்பொருளையே.

சுதிமணி இஷ்டதேவதாப்பிரார்த்தனை அகவல்

இராகம் முகாரி.

ஓம்கணநாதா ஒருவனேபோற்றி
ஆங்காரகாளி அம்பிகைபோற்றி
பூதபஸ்வப்ப புகலும்விஸ்வப்ப
மாதுசக்கம்ம மகாவிரிநீலி
உக்கிரநாச்சம்ம வோங்குசாமுண்டி
வக்கிராணசூலி வருகாலநேமி
கரும்புலிவீரா கங்கம்மசூரா
ஜருஜடாமுனியே வைரவாயிருளா
குட்டிப்பசாசரோ குறளியக்ஷணிகளே
சட்டித்தியம் தலைகொண்டதக்ஷா

ஓடிவாவோடிவா உற்றதோர்குறியை
நாடிநானெடுக்க நல்லுதவிக்கே.

திசைகாவல் அகவல்

இ - ம் - மோகனம்.

திக்கினைக்காக்கும் தேவரேமத்ரம்
முக்கியமுப்பத்து முக்கோடிசுரரே
அகமகிழ்வுடனே ஆஜாஎச்சரிக்கை
புகுபாதாளப் பூதரேவெகு
உஷார் பதினாறு கோணப்பசாசரே
ஜாக்கிரதைதுதியஷ்ட நாகத்துஷ்டரே
மட்டினிலகார்த்தானே ரணக்காட்டேரியுன்
பேய்கதிரட்குழுவைப் பிடித்துக்கட்டு
என்கட்டுக்கெதிர் புன்கட்டுடைய
வன்கட்டெனது வலுக்கசுவாகா

சுதிமணிஆறுதார தேவதாப்பிரார்த்தனை தரு

இராகம கமாசு மார்ச்சுகெட்டு.

பல்லவி

சக்தி ஸஹித கணபதி யுன் தடையெனக்கு விடு விடு (சக்தி)

அனுபல்லவி.

முக்யஎட்பொரி அவலும் மோதகம்
சர்க்கரைகரும் பிவை நிவேதிப்பேன் (சக்தி)

ஞானசந்த்ர மோனமந்த்ர நாதபோத அதிசாணுதனே
மீனலோசனி ஆனந்மனம் மிகமகிழ்கஜ முகவினோதனே (சக்தி)

சத்யலோகவாசனே சரஸ்வதிமகிழ்நேசனே க்ருத (சத்ய)
ஸத்வப்ரகிர்தியுத்தமா பக்திசிரத்தைஸம்யுக்தமா
நித்யமாகத்தொழுவேனென்றனை நீ விடுத்துரக்ஷிவந்தனே (சத்ய)

நாரணபரிபூரண நவிலும்ரக்ஷணகாரண ஹரி (நாரண)
க்ஷீரஸாகர மாதுவாரனே திசழ்கின்றவைபவசிங்காரனே (நார)

மோகனமாயாவிநோத முகுந்தவரதாஸ ஸுபோத
ஏகநாயகா இந்தமோடியெடுக்கவிடுத் துன்னருள்செய்யாடி (நாரண)

சங்கரியுமைபாகனே சரண்வரதஸங்காகனே ஹரா (சங்கரி)
இங்கிதவடிவேல்ஜநக எங்கள்ருத்ரமூர்த்தி அநக (சங்கரி)
பூதப்ரேதபேதாள நாதயோகிகங்காள
தாதவிழுங்கொன்றைசூடி தகதித்தோமென சுடலையாடி (சங்கரி)

முக்திவீடளிக்குமெங்கள் மூர்த்தியே மஹேஸ்வரா ஸ்திர (முக்தி)
உத்தமியுன்பத்தியுடன் இத்தருணத்திலும்றளித்தருள் (முக்தி)
வைத்தகுறியெடுத்துமனதி லுற்றகுறிபலிக்கவே
சித்தசுத்தி பெறறுசொற்ச மர்த்துயிக்கெலிக்கவே (முக்தி)

தாயகிமனோன்மணிஸ தாசிலத்தின்மனைவியே ஜெக (தாயகி)
நீயெனக்குத்தடையில்லாத நெறிசெலும்வழி பருளுவாய் (தாய)
ஐந்துஸ்தாந தேவரும் அவரவர்களருள்செய்தார்
இந்தவேளைநீர்செய்யாவிடில் எனக்குத்துணையதார். (தாயகி)

ஆறுவது ஸதாந்தத்தைக்கடக்கக் கூடாமையால் சுதிமணி
தேவியை நினைத்து வருந்துகின்ற விருத்தம்
இராகம் நீலாம்புரி.

ஓகோவீதென்னதாயே உலகத்திலிதுவனைக்கும்
மோகநமந்த்ரதந்த்ர மொழியிந்த்ரஜாலவித்தை
ஸாஹஸவித்தையென்பேர் நினைச்சொன்னலும்பறந்து
போகுமீதொன்றுமாத்ரம போசாததென்சொல்வேனே.

வசனம்.

ஓகோ என்னம்மா பராசக்தி இந்தஉலகத்தி லிதுவனைக்கும் மோகநவித்தைதந்த்ர இந்த்ரஜாலவித்தைகளும் ஸாஹஸஸாமர்த்திய வித்தைகளும் என்மேனைச்சொன்னலும் பறந்துபோசத்தக்கவைகளாயிருக்க இது ஒன்றுமாத்ரம் சாதிக்கக்கூடாமலிருக்கிற ஆச்சரியத்தை யென்னவென்று சொல்வேன்தாயே உன் திருவு

ளப்பாங்கு இப்படியிருந்தால் நான் செய்யலாவதேதிருக்கின்றது தாயே.

மனோநாயகன் விருத்தம்

இராகம் தேவகாந்தாரம்.

மாமிக்குமாமியோர்கால் வையகத்திருப்பாளென்று
சாமதையுண்டல்லோவுன் சமர்த்தெலாமெனவெல்லாது
போமிதுநிற்கவின்று புறப்பட்டவேளைநன்று
வாமிவியிதுகாந்தர்வ மணத்திற்குமிசைந்தநாளே.

வசனம்.

கேளாயடிபெண்ணே மாமிக்குமாமி உலகத்திலிருப்பாளென்று நீ சொல்லக்கேட்டிருப்பதில்லையா உன் சமர்தனதயே நீ பெரிதாகப்பேசிக்கொண்டால் மற்றவர்களுடைய சமர்த்து எங்கேபோம் அதிருக்கட்டும் இன்றைக்கு நானபுறப்பட்டவேளை மகா சோபனபலனுள்ளது யிருக்கிறதுமனறி காந்தர்வவிவாகத்திற்கும் இசைவானதாயிருக்கிறதடிபெண்ணே.

சுதிமணி விருத்தம்

இராகம் சாவேரி.

இருக்கட்டுமிதுவரைக்கும் என்சமர்த்தேமுன்னின்று
பெருக்கமாய்வளர்ந்ததிப்போ பிறைசூடியோர்பாகத்தாள்
அருட்கண்பார்த்திலளோவையோ ஆகிலுமுன்றன்பேரும்
உருக்கமாயுன்னையபெற்றோர் உறவினர்பேர்சொலவாயே.

வசனம்.

இருக்கட்டும் அதிக எக்களிப்புக்கொள்ளாதே இதுவரைக்கும் என்சமர்த்தே முன்னேறிவந்தது ஆனல் என்னையாண்ட பிராட்டியினுடைய திருவுளம் இந்தசந்தர்ப்பத்துக்கு இப்படியிருந்ததோ யாதோதெரியவில்லை ஆகிலும் உன்பேரும உனதுபெற்றோர்பந்துக்களுடையபேரும் சொல்லையே.

மனோநாயகன் விருத்தம்

இராகம் ஆனந்தபைரவி.

பந்தயம்வென்றதெந்தன் பரம்பரையதனைச்சொல்லும்
எந்தனதணியும்வஸ்த்ரம் என்குலப்பேரைச்சொல்லும்

அரகரசிவசிவா நித்யபூரணானந்த மனோன்மணி என்னம்மணி இதென்னகொடும்பாவம இந்த மாயக்கள்ளன் சொல்லுகிற வார்த்தை கதிரைக்காய்ச்சிக் காதிலேற்றினாற்போலிருக்கின்றதே சாவசாக்ஷண்ய ஸ்வரூபியே உன்னைநான் அதிதீவரபக்தியுடன் தொழுததின்பலனாகவா இப்படிப்பட்ட ஆயுக்தமானவார்த்தைகளைக் கேட்கவைத்தாய் உன் திருவுள்ளமிரங்கி யென்னைக்காத்தருள வேண்டுந்தாயே.

மனோநாயகன்சொல் விருத்தம்

இராகம் ஆநந்தபைரவி.

எனிந்ததுக்கங்கொண்டாய் இருக்கட்டும்வேண்டாங்கண்ணே
நானொருமோடிவைப்பேன் நங்கைநீயதையெடுத்தால்
நீநினைந்திட்டநாதன் நிமிஷத்தில்வருவானின்றேல்
நானினைந்ததுபோலென்றன் நாயகியாவாய்பெண்ணே.

வசனம.

கேளாயடிபெண்ணே யென்னகாரிய முழுகிப்போயிற்று நீ யேன் இப்படிப்பிரலாபிக்கிறாய் அப்படிவேண்டாம் இப்போது நான் ஒருமோடிவைக்கிறேன் அதை நீயெடுப்பாயாகில் நீநினைத்த நாயகன் உன்னிடத்தில்வந்துசேருவான் நானும் உன்சொற்படிகேட்பேன் அதை நீயெடுக்காவிட்டால் நீயென்னைக் காந்தர்வவிவாகஞ்செய்துகூடுவாயா இந்தவிஷயத்தில் உன்மனவுறுதிப்பாட்டைச்சொல்லடிபெண்ணே.

சதிமணி விருத்தம்

இராகம் சங்கராபரணம்.

இதுபெருஞ்சல்யமாச்சு திப்படிச்சொல்வாருண்டோ
சதிமணியருளுண்டானால் சாதிக்காக்காரியமுண்டோ
அதனைநானெடுத்தாலென்றன் ஆக்கினைக்குள்ளாவாயோ
அதிதுஷ்டத்தனமாய்ப்பேசு மடாஜோகிசொல்லுவாயே.

வசனம்.

ஒஹோ இதென்னசல்யமாச்சுது சிவபூஜைவேளையில் கரடிவந்ததுபோல நீ நான் தனித்தவிடத்தில்வந்திருந்துகொண்டு வம்

யும் வாய்வீணும் பேசிக்கொண்டிருக்கிருயே ஆகட்டும் நான் தேவியைத் திரிகரண விமலமாய்ப் பூஜித்தது நிஜமானல் எனக்கு சாதிக்காதகார்யமுண்டா நீ அப்படியே மோடிவை அதைநானெடுக்கிறேன் எடுத்தால் நீ யென்னுசகிணக்குள்ளாவாயோ சொல்லடா ஜோகி.

மனோநாயகன் விருத்தம்.

இராகம் காம்போதி.

அதுசரியிதுவேசத்யம அன்றிநான்மறுப்பதில்லை
மதனகேசரியாமென்றன் மந்த்ரமாதொடுக்கவல்லார்
விதுகுவிமுகத்தாயிந்த விந்தையாமவஸ்தைதன்னைக்
சதுமெனவெடுநீபார்ப்போம் சட்டிமந்திரிகின்றேனே.

வசனம்.

ஓகோ வெகுசந்தோஷமாச்சுது இதுவேசத்திய மந்தப்பேச்சுக் கிருவரும் தவிரவேண்டிவதில்லை - மோகனசிங்கமாகிய என்னுடையமோடியை யார்எடுக்கவல்லவர்கள் இதோவைக்கிறேன் இதை நீ யெடுப்பாயானல் நீயே சமர்த்தியடிபெண்ணே.

மனோநாயகன் பந்தன் ஆகவல்

மூலாதாரம் இராகம மோகனம்.

வட்டமாம்மூலம் வதியும்வல்லபைதன
இட்டனேஒவ்வில் எழுந்தகணேசா
விட்டிடாதெவனையும விலக்கெத்திசையும்
கட்டுநீகட்டியே காக்கசுவாகா,

சுவாதிஷ்டானம்.

சதுக்கோணச்சுவாதிட்டச் சரஸ்வதிக்குநாயகனே
மன்னும் நகாரத்துதித்தபிரமாவே
ஒருவருமவராமல எதிர்த்துக்கட்டி எறுகசுவாகா.

மணிபூரகம்.

மணிபூரகப்பிறை வடிவாங்கோணம
நணிவாழிலக்குமி நாயகாமகாரத்

# விநாயகர்காப்பு.

வெண்பா.

தாராய்பாடிப் பார்த்தசாரதிகுணகரன்மா........*
சீரார்தன்புத்ரிகட்குச் செய்வித்த - பேரார் ...*
வதுவைச்சிறப்பினையான் வண்டமிழாற்பாட ...*
வதிமதுரவாக் குகணேசா... ... ...... ... ...*

# சிறப்புப்பாயிரம்.

## நேரிசை ஆசிரியப்பா.

பூமன்செய்யும் புடவிஞாலங்களில்
நாமமாரிருநவ நாட்டினின்மேன்மையாந்
தென்னாட்டினிலே சிறந்தநெல்வேலி
நன்னாட்டின்மந்த்ர நகரினிற்சென்னைப்
பட்டினவாசி பாடிவம்சாதிபன்
கிட்டினபதோப வாசியான்கிளர்ந்த
கமலாலகோத்ர கண்யரங்கையமால்
விமலபுத்திரன் விஞ்சமூர்கிருஷ்ண
தேசிகாரியன் றிருவடிதாசன்
தேசுலாங்கடப்ப வித்தகுருவாம்
ஞானசிரியன் நற்பதபக்தன்
தேனார்சங்கிதத் தெளியமுதுண்டோன்
ஆந்த்ரக்ரந்தாதி அரியகீர்த்தனைசெய்
காந்தர்வாம்ச கனவான்பாடி
பார்த்தசாரதிதிரு பன்தவபுத்ரிகள்
ஏர்த்திருவிவாஹ இசையையாந்த்ரத்தால்
துக்கிரோல்சுப்ர மண்யவிப்ரன்சொலத்
தக்கதமிழாற் சாற்றுதன்முறையே

ஆதலாற்கலசை அம்பதிபூர்வன்
காதலாத்தெய்வ சிகாமணித்ராவிடர்
அறிவதேபயறு அறைந்தனன்
அறிஞராமென்றே அங்கிகரிப்பரோ

---

☞ பதார்த்தம் - யதார்த்தமாவிளங்கும்பொருட்டும் வடமொழியுச்சரிப்பின் சந்தவின்பமியலும்பொருட்டும் - உடம்படுமெய் - குற்றியலுகரம் முதனிலை புணர்ச்சிவிகாரங்கள் இவற்றின்விதிகளுக்குச் சிலவிடங்களில் மாறுபட்டிருப்பினும் இவற்றிற்குள்ள வழுவமைதி மரபுபற்றி ஆமென்பர் ஆய்ந்தறிந்தோரென நம்புகிறேன்.

ஸ்ரீ ர ஸ் து.

## வ ர லா று.

### நிலமண்டில ஆசிரியப்பா.

ஸ்ரீமத்ஸமஸ்த தேசரக்ஷண்ய
மாமனோஹரபூர்ண மகிமைப்ரதாபா
ஸதாநந்தபாவா ஸகலாதிதேவா
சதக்ருதுபுத்திரி தன்மனக்குமுத
மித்ராஅடியார் மெச்சுவரோதயா
ஸத்சபரியிதய ஸாரஸஆதவா
பாலகுமார பகவகுஹப்ரபோ
சாலநின்க்ருபைபெறு ஸத்பக்தசிரோஷ்டர்
வேண்டுஸாலோகஸா மீபஸாரூப
மாண்புஸாயுஜ்ய மாபதம்பெற்று
நிருவிகற்பாதிஞா னேக்ஷணராகி
சர்வஸாக்ஷாத்கார ஸத்சிதாநந்த
உருவங்களிற்கோடி யுவமைசூரியராய்
ரந்தனைசுவரியம் நிகழ்பவராகி
ரிலோகத்துள் தேர்ச்சியில்பாமரர்
பரிபவவினைகள் பறந்திடவோட்டிப்
போதஸாரூப புநிதர்களாக்கிப்

போதவோங்கினரற் புதபக்தர்கோடி
அவ்வகையிலொன்று யற்புதம்பெற்ற
திவ்யபாடியாம்சத் திரைகடற்சந்த்ரரில்
கமலாலகோத்ர கண்யசிரோமணி
விமலவேங்கடசாமி மேருவின்பத்நி
மதிகற்பன்பெனும் மான்மியபூஷணி
சதிவேங்கடம்மையைத் தான்மணஞ்செய்து
அஷ்டலக்ஷ்மியாம்ச அகளங்கமந்த்ரி
இஷ்டஸித்திப்ப்ரதா யகவசீகரவிபு
ரங்கையசுமுகனும் ரம்யனைத்தந்தான்
தங்கள்வம்சந் தழைத்திடக்கொண்ட
அன்னநரோந்திரற் கமைவுளமனைவி
சொர்ன்னவுத்க்ருஷ்டி சூடிகொடுத்தம்மாள்
ஜாதரூபோதர ஜநகஸ்ரீமானும்
மாதவபார்த்த சாரதிமகிபன்
ஸகலவித்யாதி ஸாரம்க்ரஹித்து
ஸுகஸங்கித சுபவித்யாதி
மேன்மைத்தேர்ச்சி மிகவும்புனைந்து
பான்மையிவ்வுலகப் பயிற்சியிலோங்கித்
தன்போல்மன்னுயிர் தாங்குசீலங்கொண்
டின்புறும்ஆசிரதர்க் கிலகுமாமணியாய்
வாழுநாள்தொந்தி வம்சப்ரபாகரன்
கேழ்குடிகாமல கோத்ரகீர்த்தியாதிபன்
மங்கபதிநாயகர் மகிமைசேர்பாடி
ரங்கையநாயகர் - ரஞ்சிதஸோதரி
மங்கத்தாயம்மையை மணஞ்செய அன்னவள்
புங்கவோதரத்தில் புருஷோத்தமனும்
ரங்கயநாயகர் - ரம்யமாஜெனித்தார்
அங்கவர்பாடி வெங்கமநாயகர்க்
கிங்கிதபுத்திரி வெங்கடலக்ஷ்மியாம்
துங்கபத்தினியையும் தொல்புவிபுகழும்
ஆவுலலக்ஷ்மய நாயகாட்யன்சுதை

மேவுலக்ஷ்மம்மா ளெனுமெல்லியலேயும்
அன்பாய்மணஞ்செய அவ்விருவரிலே
இன்புறுலக்ஷ்மம்மாட் கிருபுத்திரியும்
புருஷசந்ததியும் புவியிலுண்டாகினர்
திருபுத்திரிகளில் ஜேஷ்டோத்பவியாம்
செங்கமலநாச்சியார் செல்வி அலர்மேல்.
மங்கைநாச்சியா ரெனும்பெயர்வகித்து
தொந்திரங்கய சுகுணனுந்தந்தையால்
ஸந்ததமன்பு தழைத்திடவோங்கி
விருத்தியாம்நாளில் விராட்புருஷன்பத
க்ருத்யமேயிளமையில் கதியெனக்கொண்ட
பார்த்தசாரதிபூ பதியுவந்தன்பாய்
சீர்த்திசெங்கமலநாச் சியாரைமணந்தபின்
மங்கலப்புத்ரர் வரக்கண்டிலாமையால்
செங்கமலநாச்சியார் செல்வி அலர்மேல்
மங்கைநாச்சியரை மறுமணஞ்செய்து
தங்குபுத்திர புத்ரிசந்ததிகள்
உற்பத்தியாகி யுவந்தினிதிருக்கையில்
கற்பின்மிகைசெங் கமலநாச்சியார்க்கும்
சந்ததியுண்டாய்த் தழைத்தினிதோங்கிச்
செந்திருமனேசுதர் சிறப்புடன்வாழ்நாள்
கார்யதேசிகன் கடப்பலித்தேந்த்ரன்
ஸாரஸமாமலர்ச் சரணுளந்தாங்கித்
தாரகநாமசப் தாம்ருதபானம்
பூரணமாகப் புகட்டுறக்கொண்டு
வருபவுஞ்செல்பவும் வளமும்மேன்மையும்
தருபவுங்கொள்பவும் ஸகலாஸ்பதமும்
உண்டென்பதில்லென ஒருங்குறத்தெளிந்தவை
அண்டர்வம்சாதிபற் கற்பிதஞ்செய்துக்
கொண்டுதொனிகர்வ குலாரத்நமாகப்
பண்டுஸஞ்சீவ கரணியின்பான்மையாய்
இலகுகவீசுவரர் இன்பகாநாதிபர்

பலவிகடஞ்சொல் பவர்நிறைசூழ
அத்வைதாம்புதி அமிழ்தினைக்கடைந்து
ஸத்பாத்ரமாமனத் தாழியிற்கொண்ட
வாதிபௌராணிகர் வாக்ஜாலர்பரவ
ஸாதநசாத்தியம் தாங்கைக்கொள்ள
பூகைஊத்யோக வுட்பாங்கறிய
ஓகையாய்பிஷ்ட ருவந்துஸந்நிதிக்க
தனபதிநேர்நக ரத்தார்சமயம்
இனதெனக்காண எங்குநெருங்க
இவ்விதவைபவத் தினிதமர்ந்திருந்து
செவ்விய பார்த்தசாரதிதீரன்
ப்ரஹஸ்பதியின்ப்ரதி பிம்பிதவிப்ர
வரநிதிவேங்கடே சுவரஜோசியர்தன்
ஸுமுகம்பார்த்துத் தொழுதுஸ்வாமிகளே
நமதுபுத்திரிகளாம் நாசுதீமணிகள்
சூடிகொடுத்தம்மாள் சொலரங்கநாயகிக்
காடியவிவாஹ அற்புதோற்சவங்கள்
செய்விக்கபூதலத் திற்சோபிதம்பெறு
திவ்யபுரீந்த்ரவம் சோத்பவதிலகன்
காம்போதிகோத்ர சிகாமணியான
காம்பீர்யராமலிங் காதிபன்புத்ரன்
பங்காருநாயகர் பண்புளதநயன்
இங்கிதராம லிங்கநாயகர்க்கும்
சூடிக்கொடுத்தம்மா ளுக்குந்தொல்புவி
பாடுஞ்சௌர்யகாம் பீர்யபௌருஷமும்
மெச்சும்புகழ்கொள் விசேஷசற்குணமார்
கைச்சத்திரமாங் கடாரிவம்சோத்பவன்
குருவப்பநாயகர்க் குறுவரபுத்ரன்
மருதுவாக்பாஷிதன் வேங்கடராயலு
நாயகரான் நன்மாதுலர்க்குச்
சேய்லக்ஷ்மீநா சிம்முலுக்குஞ்சுப
ரங்கநாயகிக்கும் ரம்யமாம்பொருத்தம்

துங்கமாப்பார்த்துச் சொல்லியொன்ன
பார்த்தசாரதிமகி பன்னன்பாய்ச்சொலப்
பூர்த்திஸந்துஷ்டியாய்ப் புரோஹிதர்மஹாப்ரபு
ஆஹாநல்லதென் றவ்வாருயர்ந்து
ஓகோஇந்த உகளபொருத்தமும்
ஜெகத்தினில்சிரேஷ்டம் சிறந்தனவாகும்
இகத்தினிலெத்தவம் இவரியற்றினரோ
தங்கள்மருகராச் சாருதற்கென்று
மங்களமுகூர்த்தம் வைப்பித்தனரால்
உடன்விக்நேசனை யுபாஸித்துமற்றச்
சடங்குகளெல்லாந் தாழ்வறநடத்திச்
சித்திரப்பந்தர் சிறப்புறவமைத்த
தெத்திறத்தோர்க்கு மியலாதுரைக்க
ஆகிலும்புத்திக் கமைந்தமாத்திரமே
யூகித்துமொழிகிறேன் உத்தமஸ்தலத்தில்
மாமணிப்பந்தர் மஹாவிஸ்தீர்ணமாத்
தாமணிவரிசை ஸ்தம்பங்கள்நாட்டி
பசும்பயிர்த்தூண்கள் பகர்நவவர்ணத்
தசும்புபோதிகைகள் சரிவரப்புனைவித்
ததன்மேல்வேய்தல் அழகுறவிணைவித்
திதரபக்கங்களி னிற்படாமறைத்து
அசுமாநகிரி யதையோவியர்களால்
பசுமைவெண்குருநாப் பட்டைப்பணிகளில்
சந்த்ரனைக்காணத் தம்மனங்கொள்ளா
தந்திருவதநந் தாங்கவிழுவபோல்
தாமரைமலர்களுந் தாரகையினங்கள்
தாமலரிக்குத் தப்பிமறைந்தே
உண்மேற்கட்டியில் ஒட்டியிருப்பபோல்
எண்மேற்கொண்ட இனியதாட்பூவும்
அமைந்துறமத்தியில் அழகியலஸ்ட்டரும்
இமைப்பின்றிநோக்க இங்கிலீஷ்படமும்
வால்ஷேட்முதல்தா வள்யமாகக்சமான்

மேலிருபக்கமும் வியன்பெறப்பதித்துப்
பூர்வதிசைமுகம் பொலிவுறநோக்கி
ஆர்வமாவதூவர ரமர்ந்தினிதிருக்க
இந்திரவிமாந மெளிதெனநகைக்கும்
சுந்தரச்சிங்கா தனத்வயம்ஜோடித்
தெவ்வெவ்விடங்களி லிசைந்தநாற்காலிகள்
செவ்வியமேஜைகள் திருந்துறவேய்ந்து
பலநிறரத்நகம் பளிகள்விரித்து
நிலவுசிங்காதந நேர்முகத்தருகில்
ககசரஜாலங் கள்பலநிறைத்தும்
புகல்மிருகராசி பொம்மைகள்பலவும்
ரஸ்யாதிபலவு நிறம்பேதியாதவ
ஹஸ்யாதிபொருள்பல வாகக்காக்ஷி
மாத்திரத்துக்கவண் மகிமையாப்பரப்பிச்
சூத்திரப்பாவைகள் ஸொகுசுடன்கட்டி
இருந்திடுமந்த எழின்மணிப்பந்தலைப்
புரந்தரன்மன்மதன் புதுமையாக்கண்டு
நம்பதிநம்மெழில் நவையுற்றனவே
இம்பரிவ்வலங்க்ருத மிசைந்தபின்னெறு
மலைவுறப்புஷ்ப மாநிலாகண்டு
தலைமயக்குற்றுவேள் சாயகந்தேடி
இவணின்றுநீக்கில் எடுப்பாமென்னத்
தவவற்றம்நோக்கும் தன்மைசிறந்த
பந்தற்கால்களிற் பசந்துறக்கட்ட
முந்துறக்காண முன்வருவித்த
மலைபடுப்தார்த்த வகையில்விநோதமா
இலகியபச்சை யிளஞ்சாதிக்காய்
ஏலலவங்க வினமுட்டன்கான்பொருள்
நாலும்விளாங்குலை நற்சுவையிலந்தை
மருதப்பொருள்களில் வளர்செவ்விளநீர்
முருகவிழ்வாழை முட்பலாக்கமுகமும்
தொடுத்தாஸ்தானம் சொகுசுறப்பனிநீர்

வடுக்கண்சிமிழில் வைத்தஜவ்வாது
புனுகுசாம்ப்ராணிப் புகைத்திரிகமழவு
மனுக்கூட்டங்கள் மகிழ்ச்சியாத்தரிக்க
வெள்ளிலைச்சுருள்கள் வேண்டியபடியே
அள்ளிப்பூசி அகம்புறங்குளிரச்
சந்தனம்பல்வகைச் சம்ப்ரமவஸ்துகள்
அந்தமற்றுள்ளதை அம்பூமிதேவர்
தம்பதியின்ஸமே தஸ்தர்பார்த்துவந்து
தம்ப்ரம்மாநந் தங்களுக்கேற்க
சதாயுஷ்யமஸ்து ஸௌபாக்யமஸ்து
ஸததகல்யாண ஸம்ப்ராப்யமஸ்து
மங்களஸந்ததி வரப்ப்ரஸாதஸ்து
துங்கநிகேதனத் திற்சுபமஸ்து
ததாஸ்தென்றுவாழ்த்தித் தண்மலர்தூவ
ஹிதாசிந்தாமணி யஜமான்பார்த்து
மணவேதிகைக்காய் வளர்கால்நாட்டிக்
கணிசைமேற்கோப்புகள் கட்டுவித்ததன்மேல்
ருதிரோத்காரி வருஷஆஷாட
மதிப்பின்பக்கம் வளர்தசமிசுக்ர
வாரம்பொருந்து சுவாதிநாள்ரிஷபம்
சிராயமைந்த தினத்தில்விபவமா
சங்கீதமேளஞ் சகலமுந்தொனிக்க
இங்கிதராஜ மேளமுமிகல
இங்கிலீஷ்வாத்தியம் இனிமையாக்குளிர
டங்காபேரி டண்டடாமென்ன
இவ்வார்ப்பரிப்பை இப்பதிக்கிழக்கரி
ஒவ்வாநம்மொலி யெனக்கண்டுணர்ந்து
தன்னிரட்டமைந்து தாழ்ந்துபின்வாங்க
தன்னனவான சத்ராதிபிருதில்
மன்னியசாமர மயூரவிசனங்கள்
ஸங்கிபகேதந சங்கசக்ராதிகள்
குக்குடவாரண கோடரவைநதே

யக்கொடிவகைகள் எங்கணும்படபடத்
திலகதுபாக்கி எிடியெனவெடிக்கக்
கலினமாமீதில் காம்பீர்யமாக
மருகரிருவரும் வரஅநுவதித்து
அருகில்சாரங்கி யதனுடன்பிட்டில்
மத்தளச்சுதியுடன் வளம்பெறச்சேர்த்து
தத்திமிதிமிதக தகணஜெணுங்க்ருத
தித்தித்தகதெய் ததிங்கிணதோமென
சுத்தித்தாசிகள் சுரதகேளிக்கிசை
வர்ணசுரஜீதி வளமுடன்பாடி
நன்னயசதிபுடன் நாட்டியமாட
ஊழியர்ஜனங்களீ யொருபுடைவிலக்கச்
சூழ்கட்டியர்கள் தொழுதுவணங்கி
மஹாராஜராஜா மஹாவித்யபோஜா
மஹாஇந்த்ரபோகா மார்த்தாண்டதேஜா
சாமிபராக்கென்று சந்ததங்கூற
காமிதஸத்கவி காயககோஷ்டிகள்
பாடித்துதிக்குமிப் பான்மையசமயம்
நாடுசுமித்திரர் நயனங்களிக்க
சோபிதமங்கையர் சுபப்பொருளேந்த
நீபத்தாரணி நிர்வாகப்ரபு
இத்தகைவைபவத் தினிதினகர்வலம்
சுற்றிவரச்செய் வித்துநேத்திரோற்சவ
மணவலங்கார மன்னிச்சிறந்த
குணஸ்வயநிகேதநங் கொணர்ந்தந்நாண்முதல்
மருகர்புத்திரிகட்கு மாலையுங்காலையும்
மருநலங்கிட்டு மாநிலமகிழ
நாளைலக்கினமென நவின்றிடஇன்றைய
வேளைஸ்ரீகடாரி வேந்தர்வர்ணச்சிரம
தருமத்தையொப்பத் தங்குலதெய்வக்
கிரியையைச்சிறப்புடன் கிரமமாச்செய்து
வீரர்பூஜை விதியுடனடத்த

கார்த்திகைல் யாணிக்குளக்கரை
விஜயஞ்செய்துறை வேத்தியஞ்செய்ய
சுஜநங்களுடன் சொகுசாய்ப்போய்வரப்
பணித்திடும்வணமவர் பண்புடனடத்த
அணித்தநாள்ருதிரோத் காரிவற்சரத்தில்
ஆஷாடபஹுளம் அசுரகுருநாள்
பேசும்விசுவநாள் பிராதகாலத்தில்
பார்த்தசாரதிபூ பாலன்புண்ணிய
தீர்த்தஸ்நாநம் தீர்க்கமாச்செய்து
பட்டுடுத்துத்தன் பாலத்திருவணி
இட்டுத்துழாத்தார் எழின்மார்பணிந்து
வயிரங்கெம்புகள் வண்மையாப்பதித்த
செயிர்தீர்மோதிரஞ் செவ்விரலிட்டு
பூஜாவிதிகள் புநிதமாநடத்தி
தேஜோமயருமால் சிரமீதணிந்துதன்
னுடனேஸ்நாநம் ஒருங்குறச்செய்த
புடவிப்பொறையும் பொன்னும்சம்பதி
போஷணசதிரும் புறவிருந்தோம்பலும்
ஈஷத்துங்குறை யின்றிஜொலித்து
மனைவாழ்க்கையின்றிற மாநிலமாதர்
இனதெனவறிய இயற்றிக்காட்ட
அவதரித்திட்ட அருந்ததிநிகர்த்த
துயவபத்திநிகள் தொண்டுசெய்தமர
மருகார்புத்ரிகட்கு மங்களஸ்நாநம்
புரிந்துதிருவணி தரித்திடச்செய்து
துப்புளநவமாந் தூசுடுப்பித்து
அப்புறஞ்சகல அணிஜண்டிபாகை
பாஷ்யம்சிரபோஸ் பைம்பொற்பூணூல்
பூஷணங்குபேரன் புனைவித்தல்போலவும்
புத்ரிமணிகட்குப் பொன்ரத்நப்பணி
எத்திசையோர்களும் இலகும்படியாய்த்
தாமனையாசினி தரிப்பித்ததுபோல்

காமர்செய்தப்புறங் கௌரிபூஜாவிதி
தமதுவர்ணச்சிரமந் தப்பாதியற்றி
விமலவிப்பிரர்களை மெல்லியலாருடன்
தம்பதிபூசைசம் பிரமமாச்செய்து
தம்புத்திரிகளைத் தத்தம்பதிகளைத்
தொழுதிடச்செய்யத் தொழப்பட்டவர்கள்
வழுத்தினர்மங்கள வாக்கியசகிதமா
உசிநிமாகாளி உகந்தகோயிலின்பால்
இசைபுறக்கட்டும் இரண்டுதோரணங்கள்
பூசைசெய்வித்துப் புநிதஸ்ரீபுத்திரி
வாசாம்போருஹ ஆசநிப்ரசாத
சூடிக்கொடுத்தம்மாள் சுபமணநிகேதந்
தோடமைதோரணத் தூயபூசைகள்
சீர்குருசாலமுத் தியாலுநாயகர்செய
ஏர்பெறுரங்கநா யகியம்மைவதுவை
மந்திரத்தோரணம் மத்தசாநிமு
குந்தநாயகர்மேற் கொண்டுசெய்திடக்
கண்டுஉசிநிமா காளிகோயிலின்பால்
அண்டியஅரமனை அமைத்துக்கடாரி
வீராசாமி மேன்மையான்பத்நி
பேராதிலக்ஷிமி யெனும்பெண்ணரசியும்
பண்புளீந்த்ராந்வய பார்த்தசாரதிநிதிக்
கன்புளபாரி அம்மணியம்மையும்
அரமனைநிறைக்க அதன்பின்னுகத்
தளைபுகழ்ஜேஷ்ட சந்ததியாகும்
சூடிக்கொடுத்தம்மாள் சுபமணவேதிகை
வாடாஆகண்டம் வளம்பெறவிளக்க
கடாரிஸ்ரீராம நாயகர்களத்திரம்
விடாஅன்பொங்கும் மீனாட்சியம்மையும்
அரமனைக்கலன்கள் அமைத்தகண்டங்கள்
திரமுடன்விளக்க ஸ்ரீரங்கநாயகி
அம்மைநிவேதிகை அமைத்துடனிற்க

செம்மைவிவாஹத் திற்குவந்திருந்த
வாழ்வரசிகளும் மணஅரமனைகள்
தாழ்விலாதியற்றச் சகலவாத்தியங்களும்
முழங்கஸ்நாநம் முன்புசெய்திருந்த
மழவிளங்குமரர் வரபுத்ரியர்க்கும்
கங்கணந்தரிக்குங் காண்மணவாளர்கள்
இங்குதாமசம் என்னெனக்கோபமா
இவ்வாறறிந்தால் இவண்வருகுவமா
செவ்விதென்றுடனே சீலசப்புச்சவர்
வாரணவாசி வழிப்ரயாணஞ்செயக்
கோரணிக்குல்லாய் குறைப்பீற்றற்குடை
ஏடுங்கொண்டுகால் இரக்ஷைபுந்தொடுத்து
நீடுகைத்தடியும் நெறிப்பாயூன்றி
விசிறியுஞ்செம்பும் வீறுடனெடுத்துகை
விசிறிப்புறப்படும் வேளையில்மாதுலர்
ப்ரதமபத்நிசுதன் பிள்ளைகலிதீர்த்த
வரசுப்பராவ்பால கிருஷ்ணசுவாமியைப்
பெரியமாப்பிள்ளையைப் பேணியழைக்கவும்
பிரியமிகுந்த பின்னைபாரியைசுதன்
சுப்பராவ்சின்ன கிருஷ்ணசுவாமியைப்
பெட்புடன்சின்னமாப் பிள்ளையையழைக்கவும்
நியமிக்கஅவர்களந் நேமப்படியே
நயமுடன்சென்று நல்லதுசபாஷ்பளா
அத்தானவர்களுக் கித்தனைகோபமா
மெத்தவேடிக்கை மேலோர்பிசிசே
வாறுகல்கிநட் லேதேபிகிசே
வாறுசாநுமனு ஐஎலென்பார்கள்
அவ்வகைஸாமதை யடுத்துக்காட்டினீர்
இவ்வகைசெயன்மின் எஞ்சோதரிகளைத்
தந்துநும்மைக்கிர ஹஸ்தர்களாச்செய
வந்தோம்நீவிர் வம்மெனவிளித்துப்
பிணக்குடனிவர்கள் பின்னுமிப்படியே

துணுக்கெனச்செல்வரத் துடுக்கினைநிறுத்த
மெல்லியல்நகையிவர் மென்பதத்திட்டால்
பல்கிப்பலரும் பரிகசிப்பாரென
நாணியிங்ஙனே நண்ணுவரொன்று
பேணிகால்மெட்டிப் பிரியமாயிடவே
காற்றொடுமுமக்குக் கைக்கணையாழி
ஏற்றிடவிடுவோம் எம்புகழ்க்கிடாய்
என்னமொகர்மோ திரமிருவருக்கும்
நன்னயம்பெறுவச நத்துடனிட்டபின்
தம்மைத்துநர்களைத் தாங்கூட்டிவந்து
செம்மைசேர்விவாகத் திகழ்மனைசேர்த்தபின்
பார்த்தசாரதிநர பாலனன்மனைவி
சீர்த்திசெங்கமலநாச் சியாரெனும்பெயரைக்
கொண்டதாயம்மாள் கூடியிருக்கப்
பண்புடனேதம் பதிபூஜையைக்கொண்
டப்புறம்புளீங் த்ராங்வயவுத்பவன்
தப்பிலாப்பார்த்த சாரதிநாயகர்
அன்புளபத்நி அம்மணியம்மாள்
தன்பதியுடனே தான்வந்துநிற்சப்
பாதபூஜை பண்புடன்கொண்டு
போதரப்பார்த்த சாரதிப்புரவலன்
செங்கமலநாச்சியார் தேவியாருடன்
ரங்கநாயகி ரம்மியமணவறைக்
கிங்கிதமாக வெழுந்தவணணுகிப்
பொங்கமாகப் புஷ்பாக்ஷதைகளால்
பாதபூஜை பரிவுடன்பெற்றுபின்
மேதகுகடாரிவம் மிசதுல்யனான
நரசிங்கநாயகர் நாயகியான
ப்ரியபெத்தவல்லி யெனும்பெண்மணியுடன்
கூடிதாட்பூசை கொண்டஅநந்தரம்
பாடிபார்த்த சாரதிபார்த்திபன்
ப்ரதமபத்நியுடன் பிருதுவிதேவர்கள்

சரதமந்த்ரார்த்தஞ் சதுரர்ச்சொல்ல
வாத்தியகோஷம் வளம்பெறத்தொனிக்க
வாய்த்தவாழ்வரசிகள் மங்களகௌரி
கல்யாணம்பாடக் ககநதேவர்கள்
துல்யமாமங்களாஸ்துவென்றுவாழ்த்த
சகலவர்னத்தார் தார்மலர்தூவப்
புகலுமுத்க்ருஷ்டம் பொருந்துமிவ்வோரை
மருகரிருவர்க்கும் வரகந்நியர்கள்
இருவரைக்கந்நிகா தானமாயீந்து
இருபிறப்பாளர்க் கிசைகந்யதானமும்
ப்ரபலமாயுள்ள பெருந்தானங்களும்
கரவிலாதளித்துக் கனிதானமுதவி
மரபுவழாநிலை மகத்வமுஞ்சுசமார்
மணவாளர்களும் மகளிரிருவரும்
தணீவிலாதோங்கித் தரைமேல்வாழச்
சேஷையரிசி சேர்ந்திருந்தவர்சுப
பாஷைசொல்லிப் பரிவுடனிட்டபின்
பூரிதானம் பூசுரர்க்களித்து
வாரமாம்பந்துகள் வரிசையாயிருந்து
பாரினினளனிடம் பக்குவம்பயின்ற
சிறோனமாதவா சாரியர்சமைத்த
பூரணசுசிருசிப் பொருள்கள்நிறைந்த
ஆரமுதுண்டுமே லகமகிழ்வாகி
தாம்பூலாதிசந் தனம்பனீரத்தர்
பூம்பந்தாரம் புதிதமாவழங்கி
ஏலஜாதிக்காய் லவங்கஜாபத்ரி
சாலவும்பரிமளச் சரக்குகள்பலவும்
பூர்ணமாத்தந்தப் பொழுதுசாயந்திரம்
சீர்பெறுமருகர் ஸ்ரீசுதீமணிகளுக்
காபரணாதி யலங்கரித்தப்புறம்
சோபிதவூஞ்சல் சொகுசாயமைத்துப்
பூப்பந்துடன்தாம் பூலமாலைகள்

கோப்புடன்மாற்றுங் குதூகுலக்காட்சி
செப்பமாக்கண்டு அப்பொழுதேமுதல்
ஒப்பிலாவேறாமம் உதயகாலத்திலும்
இரவிலூஞ்சலும் இட்டிரண்டாந்தினும்
வருநாளிகாவற் பெருமாள்பிள்ளை
வீட்டினின்மருகர் மேட்டிமையுடலைக்
காட்டிசென்றிருந்தவர் களைவருவித்து
அருமைபாராட்டி அன்பாயபையா
குருசாமிநாயகர்க் குறுமணஞ்செய்வித்
தைந்தாம்நாளில் அங்கைககங்கணமவிழ்த்
துந்துப்ந்துக்களும் உறவினர்திரண்டு
மஞ்சள்வஸந்தம் மகிழ்ச்சியாயாடி
மிஞ்சுசந்தம்பெறு விமாநத்வயமெனும்
கண்ணுடித்தகத் துகளிரண்டினையும்
கண்ணகன்ஞாலக் காட்சிக்கினிதாம்
அற்புதஜோடினை அலங்க்ருதஞ்செய்து
பொற்புறும்வஞ்சிப் புரவலகிரீடமும்
தஞ்சாவூர்ப்பதி தன்னெழின்மகுடமும்
மிஞ்சுமதிப்புள வில்லுமிழ்நகைகளும்
அவற்றிற்கிசைந்த அங்கிஜாமாமுதல்
நவம்பெறத்தனது நன்மருகருக்கும்
புனைவித்துடன்தம் புத்திரிகட்கும்
இனையனவெனவிவ ரித்திடவொண்ணு
ரத்தினநகைக ணிரம்பிடவிட்டுப்
புத்ரிமருகரிப் புரிவலக்கோலம்
பூண்டத்தகத்துமேற் பொலிவுறவேற்றுவித்
தீண்டரிதுகாணு மிவ்வழகென்னக்
கண்டவர்புகழக் கருமருந்தின்றெழில்
எண்டரும்விநோதமா வினிதினுண்டாக்கும்
மத்தாப்புப்ருசு வகைவகைவிளங்க
உத்தமத்தியாகிக ளொருவர்க்கிதலை
மச்சரியத்தான் மறிக்குங்குலாமணா

அச்சுறுத்தகற்றல்போற் கிச்சுக்குடுக்கையும்
எங்கனுங்கலிக்க இந்திராவுன்றன்
உங்குதவிர்த்த வொருவனதுவனைக்
கதிபதிபதநிதி யகப்பெட்டியிலே
மதியுடன்ஸததம் வைத்துகாப்பாற்றியும்
நுஞ்சிறைதவிர்த்த விநோதவுத்தண்டன்
அஞ்சிறைமயூரன் அழகியவேலன்
தீர்க்கபிம்பாநநந் தினந்தரிசித்துப்
பார்க்குளேவாழும் பார்த்தசாரதி
புவனப்ரகாசன் புகழ்க்குணநிகரோ
இவனுக்கென்ன இகழ்ந்துவிள்ப்பபோல்
ஆகாசபாணம் அந்தரத்தில்வெகு
வேகார்ப்பரிப்பாய் மிகமிஞ்சிப்பாய
பூத்திரிமத்தாப் புக்கம்பபாணம்
ராத்திரிவிளக்கு மாசையுடுத்திரளைக்
கிட்டிப்பார்ப்பபோற் கிளம்பிவான்மறைக்க
எட்டித்தாவும் எழிற்பரிவீரர்கள்
நடத்திக்கொணர நாலங்கம்வாச்சியம்
புடைத்தொனித்திடவெழிற் போகவேசியர்கள்
நாட்டியமாட நற்கிங்கரர்கள்
கூட்டநெருக்கங் குணப்படவிலக்கக்
கட்டியர்விஜய காம்பீர்யதேஜா
மட்டிலாக்கீர்த்தி மஹோநந்தாபராக்கென
காயகர்கவீசுவரர் கலித்துடன்படர
நாயகதீமணி நற்பார்த்தசாரதி
மிகமகிழ்கொண்டு மேலாமருகனை
உகளபுத்ரிகளையும் உத்தமசதநம்
சேர்த்திமறுநாள் சித்திரப்பந்தரைப்
பூர்த்தியாம்ரஞ்சிதம் பொருந்தச்செய்து
பார்த்தசாரதிப்ரபு பாடியபதஜமா
நேர்த்தியாய்க்கூட்டியந் நிலவுபதப்பொருள்
ஆரென்னபோதித் தாரோவென்று

# திலமண்டில ஆசிரியப்பா.

நேரிழையார்கள் நீலாம்புரியில்
நவரஸபாவம் நவினமாக்காட்டிச்
சுவைமொழியின்னிசைச் சுரமுடன்பாடி
காட்டியமாட நண்ணியபந்துகள்
கூட்டமாயிருபுறங் கூடிச்செறிந்திட
தாஷ்டிகன்பார்த்த சாரதிப்ரபுவின
பீஷ்டஸித்தியுடன் பிரியமாப்பந்தரில்
வந்துவீற்றிருந்து வாழ்மருகனையும்
உந்துபுத்ரிகளை யொருங்குசேர்ந்தினிதாய்ச்
சித்திரப்பந்தரிற் சிறப்பித்திருக்கும்
வெற்றிசேர்சிங்காதனத்தில்வீற்றிருக்கச்
செய்யும்போது ஜேஷ்டமருகன்
ஓய்யாரப்பத்நி யுடன்ரதிமதன்போல்
இனிதுவீற்றிருந்தெதி ரினிடமாடும்
வநிதையர்க்கநேக வராகனீறுஞ்செயக்
கனிஷ்டமருகனுங் காதலியுடனே
மனநிறைமல்லிகா தேவியும்வசந்தனும்
வந்திருந்ததுபோல் வளர்விமாநத்தகை
சந்தமாமலங்க்ருதத் தகத்தில்வந்திருந்து
பாதமெதிரே பண்புடன்செய்யும்
பாத்தையர்தமக்குரு பாயள்ளியள்ளி
இறைந்தந்திவ்வண மிலகச்செய்தும்
தனதெனுஞ்செருக்கைத் தவிர்த்தநிகர்வ
சிரோமணியான ஸ்ரீபார்த்தசாரதி
வரோதயன்ஜேஷ்ட மனைவிசுதனும்
சுப்பரார்வ்பாலகிருஷ் ணசுவாமியையும்
ஒப்பிலாக்கனிஷ்ட வுத்தமிசுதனும்
சுப்பராவ்சின்னகிருஷ் ணசுவாமியையும்
ஒப்புடன்கூடி யுவந்துதாம்பூலம்
வாசனைத்திரவிய மலராரங்கள்
நேசர்க்குத்தந்து நிற்கநியமிக்க
திராவிடசொல்லாஞ் சித்ரஜோடினைகண்

டிராவிவ்வாறுஜோ டித்ததார்புவியில்
விவாஹமங்தம் மேதினியினில்நாம்
அவாவுடன்கண்டோம் அரசர்கட்கேனும்
இவ்வகையலங்க்ருத மியலாதென்றும்
அவ்வவர்மகிழ்வுகொண் டாங்திக்க
ஹிந்துஸ்தானியில் இசலாம்மதத்தார்
ஸந்துஷ்டியாய்ப்பல ஜமாக்கள்கூடி
வஹவாகைஸீம் ஜேகேமண்டுவா
பொஹத்தமாஷாக்யா போலுமகஸ்விரா
ஙவாப்கேமஹால்பீ நஹீஐஸாவெனத்
தவாதாச்சர்யமாத் தாம்பாஷிக்க
அன்றுகேளிக்கையை அமர்த்திஅங்நாண்முதல்
வென்றிமிவ்விபவவே டிக்கையைங்துநாள்
தப்பாதியற்றவித் தகைமணத்திற்காச்
செப்பம்பொருந்தச் செய்தக்ரந்தங்களில்
முதல்நாள்ராய பாரமுமறுநாள்
ஸதிஸஹகளஸ்திரி தர்க்கமூன்முநாள்
மோடிவிர்த்தாந்தமும் மொழியுநாலாநாள்
கூடியடிக்குங் கொப்பியைந்தாநாள்
கோலாட்டமிந்தக் கொள்கையாய்ப்ப்ரதிதினம்
மேலீட்டத்துடன் வேடிக்கைகண்டு
பார்த்தசாரதிமகி பதிவேமுேர்நாள்
சீர்த்திஅங்கிலோ தேசப்ரபுகட்
கொத்தவிருந்திட வுவந்துகைதேர்ந்த
சுத்தியும்பக்வமும் சுறுசுறுப்புள்ள
பட்லர்களாலே பலவகைத்தீனிசுப்
கட்லெட்ஸரோஸ்ட்டுபை கஷ்டர்ட்புட்டிங்
முதலாபுள்ள முதற்றரத்தீனிகள்
விதம்விதமாக வேசமைப்பித்து
சதிர்க்கொட்டகையில் ஸைஜாயமேஜைகள்
இதமுறப்போடுவித் திலகுதாவள்ளியத்
துப்பட்டிமேலாய்ச் சுப்ராகுளோப்புகள்

வைப்பிதழ்கேற்றி வளமைபிங்கான்கள்
கத்திமுள்ளு கரண்டிடம்ளர்கள்
சுற்றிச்சூழத் துல்யமாப்பரப்பி
ஓயின்கிளாரொட்சம் பொயின்கிளாஸ்மண்டித்
தொயில்பெறவைத்து உரொட்டிசால்ட்சல்லர்
ஆதியாம்ஸாமான் அறைகுறைவின்றிப்
போதசேகரித்துப் புதுநாற்காலிகள்
இடுவித்துவிருந் தின்யஜமானு
யடுத்துவந்திருக்கும் அங்கிலோப்ரபுக்களைக்
கண்டாசரித்துக் கைகொடுத்தாட்டிக்
கொண்டாடவந்து கூடியிருந்து
பார்த்தசாரதிமகி பன்சாமர்த்யமும்
கீர்த்தியும்வேலைக் கிரமமுமறிந்த
குணஜான்கின்னியரொஸ் குவயரவ்விநோதம்
தணிவிலாமகிழ்ச்சியாய்த் தாங்கண்டநந்தரம்
நம்பார்த்தசாரதி நாயகர்செய்த
ஸம்பத்விபவமென் சாற்றுவேன்ஆஹா
சஹபாஸ்—நன்றெனத் தம்மன்பவர்மேல்
மஹத்தாய்வைத்த மமதைக்கிணங்கத்
தலைமேஜையிலே தாஞ்சிறந்திருந்து
நலம்பெறத்தம்முட் னண்ணும்அங்கிலர்க்கு
சூப்தொடுத்துப்பழத் துவிமேஜைவரையில்
ஆப்தமாத்தீனிகள் அன்புடன்பகுந்து
பீர்சம்பொயின்வரை பெருகவேவிளம்பி
ஆர்வமாப்பருகியுண் டானதின்பேரில்
பிரிஸிடெண்டுகின்னியர் பிரபுவேனையருடன்
அரியசதிர்க்கொட் டகையெழில்நோக்கி
ஹௌபியூட்டிபுல்திஸ் ஷெடீஜ்எடார்நெட்
ஹௌபெஸ்ட்டுபர்நீட்சர் ஆர்சப்ளையெட்ஹியர்
எக்ஸெல்லெண்ட்மெஸ் எவர்ஐநெவர்ஸா
ஸச்றிச்டிஷ்ஷெஸ் ஸப்பீஷெண்டொயின்
எனப்பலபுகழ்கள் இங்கிலீஷினிற்றம்

இனத்தர்களுட்டனே இன்பமாப்பேசி
மாட்சிமைதங்கிய மஹாஇங்கிலாண்டின்
ஆட்சிவிக்டோரியா அரசியைவாழ்த்தி
க்ஷேமங்கள்கோரித் திருப்திபாய்ஒயின்கிளாஸ்
தாமவரவர்கள் தத்தங்கைகளில்
ஏந்திநிறைத்து யாவரும்நிற்க
வாய்ந்தபுகழும் மாகண்யமுஞ்சேர்
உல்யம்வெறன்றிகிறே துரையுவந்தெழுந்து
புல்லியகுதூஹலம் பொருமியஇரைச்சலை
மெல்லெனநிறுத்த மேஜையில்தட்டி
எல்லவரினிதாய் இசைந்துகேண்மின்
நாமிம்மந்த்ர நகர்வந்துஷோடச
நாமவற்சர நலமாச்சென்றஅந்
நாண்முதலின்றைய நாள்வரையிந்த
ஜான்கின்னியர்துரை தம்மிடத்திந்த
பார்த்தசாரதிநற் பண்புமானேஜர்
பூர்த்தியாய்வைக்கும் புநிதவிசுவாசமும்
யஜமானபக்தியும் யதார்த்தவசனமும்
நிசமாயானிந் நிலமதிற்காணேன்
அதற்கிசைவாக ஆசிரதபாலநம்
ஸததமுஞ்செய்யும் ஜான்கின்னியப்ரபு
தமதுமானேஜர் தம்மிடம்வைக்கும்
மமதையுங்கண்யமும் வளர்விசுவாஸமும்
எங்குங்காணேன் எங்குமார்கடவுள்
தங்குகாருணியமித் தகைமையான்பேரில்
வைத்துஸாம்ப்ராஜ்ய வாழ்வுதந்திருப்பது
உத்தமகடவுளின் உயர்பெருமைக்குச்
சரியேஎங்கள்வே தத்தினுக்கெதிராய்
இருபத்தினிகளை இவர்மணந்தாரெனும்
அவ்வுத்தமிகள் அகவிமலத்துடன்
செவ்வியபவ்வியமாச் சேவித்துவருதலும்
புத்ரபௌத்ராபி விருத்தியும்பந்துகள்

பத்திநேஜந பரம்பரைஸமேதமா
இருப்பதைப்பார்க்க இஹத்திலிவ்வாழ்விலும்
பெருத்ததென்னெனப் பேருவப்பெய்தினேன்
விவாஹவிவ்வதூவரர் மேதினிமீதில்
அவாவுஸந்ததிநிதி ஆரோக்யமுறநந்
தேவனுக்குத்துதி செலுத்தினேமெனவும்
ஆவலாய்ப்பின்னும் அநந்தங்கூறி
திராக்ஷாரஸமகிழ்ச் சிப்பொங்கிபருக
நிராயவந்திருந்த நேசத்துரைகள்
நினைக்கவின்னியர்ப்ரபு நிறைரசக்கிளாசைத்
தனதுகைக்கொண்டு தன்னெதிர்நின்ற
பார்த்தசாரதிகுண பதியைக்காட்டியிப்
பூர்த்திதிரதைப் புருஷனும்நானுமிப்
பான்மைஅந்யோந்யமாப் பகருத்யோக
மேன்மையில்கலந்து வெகுவருஷங்கள்
ஆயினவிவரொன் னளவில்விசுவாசமும்
நேயமும்பக்தியும் நிறைவுடன்வைத்து
சாமிகார்யமே தனதெனத்தன்சுக
நேமம்பாரா நிகழ்த்திவர்த்தித்த
என்னன்புக்கோர் இசைந்தபாத்திரிந்
நன்னயபார்த்த சாரதிநாயகர்
என்னுடன்கூடி இருக்குமிந்நாள்வரை
தன்னேவல்கேட்குஞ் சகலத்திராளையும்
அன்பாய்ப்பாலித் தாரொன்பதன்றித்
துன்புறவித்தா ரெனுஞ்சொற்கேளேன்
ஆகையாலிவர் அஷ்டைசுவர்ய
போகபாக்யமும் புத்ரஸம்பத்தும்
பெறவுமிவ்வதூவரர் பெருகியெந்நாளும்
உறுபுத்ரபுத்ரிகட் கோங்கும்மணங்கள்
எப்பொழுதுஞ்செய் திலகிடவென்று
செப்பமாயெமது தேவனைவாழ்த்திநேம்
எனமொழியும்போ தேனையரெழுந்து

தந்தம்மகிழ்ச்சிகள் தாந்தாம்பகர்ந்திவ்
விருமருகருக்கும் இருசந்ததிகளும்
பெருவாழ்வுமுற்றுப் பிறங்கிடவென்ன
ஆசிர்வாதிக்கும் அற்றமதனிலே
மாசிமான்ஜான் கின்னியமாப்பிரபு
ஹெல்ப்ஹெல்ப்ஹுரே ஹெல்ப்ஹெல்ப்ஹுரே
ஹெல்ப்ஹெல்ப்ஹுரே என்றுரப்பரித்துப்
பூர்ணகிளாஸ்லுயின் புதுமையாயருந்தி
ஆர்வமாக்கணிகையர் ஆட்டம்பார்த்தினும்
ஸமூர்த்தியாய்க்கொடுத்துத் தம்மிடஞ்சேர
அநுஜைஆசாரம் அவரவர்பெற்று
மநுக்குழாம்பாண்டு வாத்தியஞ்சூழ
விடைகொடுத்தனுப்பி மேல்மறுநாளும்
அடைவுடன்ஈஸ்டிண் டியர்க்குமவ்வாறே
விருந்துசாமான்கள் மிகவுமேசேகரித்
திருந்திடத்தினி செப்பமாக்கொடுத்து
தின்றுகுடித்துத் தேக்கித்திளைக்க
வென்றியாய்வதூவரர் மேன்மையாய்வாழ்கவென்
றேத்தித்தத்தம லேடிகளுடன்பாண்ட்
வாத்தியஸதிப்படி மகிழ்ந்துகூத்தாடித்
தத்தம்மனைக்குத் தாம்விடைகொண்டார்
அத்தினம்கேளிகை அமர்த்தும்படியாய்க்
கட்டளைதந்துமா களிப்புடன்மறுநாள்
இஷ்டபந்துகள் எழில்கவிகாயகர்
ஆசிரதாபிருத்தியர் அனைவர்ஸஹிதமா
வீசியபுகழ்சேர் விவாஹமாளிகையில்
இனிதுவீற்றிருந் தெதிரினில்கணிகையர்
எவரென்னபோதித் தாரோவென்னும்
சுவயபதம்பாடிச் சொகுசாய்நடனம்
செய்யக்கண்டு திருப்தியடைந்து
பையரவல்குலார் பரதம்நிறுத்திக்
கல்விமான்களுக்கும் கல்லாரில்லாப்

பல்விப்ப..ர்க்கும் பாடகர்தமக்கும்
முக்யமாம்பிரா..ணர் முதலானவர்க்கும்
தக்கவிலைபெறு சரிகைவேஷ்டிகளும்
தங்கநாணயங்களும் தக்ஷிணையுதவி
அங்கவர்செய்யும் ஆசிமேற்கொண்டு
அந்தநாள்ஸதஸ்ஸார்க் கன்பாய்அநுஜ்ஞை
தந்துமறுநாள் தமதுபந்துகட்குச்
சரிகைச்சோமனும் சரிகைச்சேலையும்
உரிமைவெகுமதி உவப்புடன்கொடுத்து
அடுத்தநாள்தன்னை அணித்தகிங்கரர்கட்
குடுத்திடவஸ்த்ரமு மொளிசெய்சரிகை
உருமால்கடகம் ஒண்பொன்மோதிரம்
தரித்திடஈந்து சம்வற்சரம்வளை
இறுமிவ்வாறுதந் திருந்ததன்மத்தியில்
தனதுசொந்தமாத் தாஞ்சென்னைநின்று
அழைப்பித்தமுகுர்சிங் காதனத்தெழிற்பணி
இழைப்பித்ததன்மேல் இனியநன்மாமனார்
சுதனிளையமருகனும் சொற்பின்புத்ரியும்
சுதினமொன்றினில்நகர் சுற்றிவலம்வரத்
தூரியம்பலவும் தொனித்தினிதியங்க
நேரிழைவேசியர் நிர்த்தனஞ்செய்ய
சத்ரசாமரவகை தழைத்தினிதோங்க
உத்திகாயகர்கள் உவந்துபண்ணிசைக்க
பாணவேடிக்கைகள் பண்புடனடத்த
வேணவிநோதம் வியப்புடனியற்றுவித்
தூர்வமாவூர்கோ லஞ்செய்வித்து
ஏர்மேல்நிகேதநத் தினிற்ப்ரவேசிக்கும்
காலையில்பிரதான கடைதாளிடவே
மேலாம்ஸஹோதர ஸோதரிவினவிடைப்
பாட்டுசெள்பாடிக் கபாடந்திறந்தபின்
தூட்டிகன்பார்த்த சாரதிகிரீடி
சகலமானவர்க்குந் தாம்பூலாதிகள்

அகமகிழ்வுடனே அருளினார்இவ்வித
நேத்ரோற்சவங்கள் நீணிலம்வியக்கும்
கிர்த்தியாய்ச்செய்துமக் கிர்த்திதமக்குத்
திலமளவேனுஞ் சேர்ந்ததென்றெண்ணு
நுலகுண்டவாயன் உன்மாமனருட்
கற்பிதஞ்செய்தும் ஐயநின்னெழில்சேர்
பொற்பதமவர்க்கே புகவிட்டுந்தன்
காரியகுருவின் காருண்யமென்றும்
சீரியநெறியில் தெளிந்ததுவிந்தை
ஆதலாலிப்புகழ் ஆர்க்குங்கேட்கவும்
ஓதவுமுரித்தென் றுன்முன்னிலையில்
கிளர்த்தினேன்வாரண கேதனஅன்னவர்
வளர்த்திடும்ஆயுளும் மகதைசுவர்யமும்
சந்ததிப்பெருக்கமும் சரீராரோக்யமும்
கந்தநின்னருளாற் சந்ததம்பெற்றுத்
தரணியில்வாழ்கநின் றண்ணருள்வாழ்க
சரவணபவநின் சரணிணைவாழ்க - ஸ்ரீரஸ்து

ஸ்ரீரஸ்து.

---

உ

## மங்களம்.

சங்கராபரணம் - ஆதிதாளம்.

ஸ்ரீசுபமங்களம் - திர்க்க - ஜெயமங்களம் -
ஸ்ரீசுபமங்களம்.

வாசவன்ஆட்சிப்ர காசமாவதற்குமாம
கேசனார்தந்தமுரு கேசர்வள்ளிநேசருக்கும் ஸ்ரீசுபமங்களம்.

அண்டர்வம்சோத்பவர்க்கு அழகியகண்ணருக்கு - ஒண்டொடிஸத்யபாமை ருக்மணிஸமேதருக்கு - தண்டுழாய்மாலையணி தாசருக்கு நேசருக்கும் - ஸ்ரீசுபமங்களம்.

நித்யகல்யாணகுண நேமநிஷ்டாபரன - சத்தியவாசகன்பார்த்த சாரதிசுகுணனுக்கும் - அத்தனையோன்பத்நிசதர் ஆர்த்தநன்மரு களுக்கும் - ஸ்ரீசுபமங்களம்.

எஅண்டார்க்ஷேஅண்டுசம் பேலியாரவர்களுக்கும்- தோமேடு ட்டினுக்கு நாயசமாமந்த்ரகர்க்சேயும் - வியாபாரஇஷ்டர்யாவரு க்கும் - மங்களம் ஸ்ரீசுபமங்களம் - தீர்க்க - ஜெயமங்களம் ஸ்ரீசுபமங்களம்.

துவாரகாவாசன் துணைபடிவாழ்க.

திருஞானதேசிகன் திருவடிவாழ்க.

சம்பூர்ணம்

சுபமஸ்து.

இந்தப்பாவின்பெயர் நிலமண்டலஆசிரியப்பாவெ [illegible]

திருக்கவேண்டும்.

முற்றும்